Des: Deltota Harees

AHARAM

# அகரம்

தரம் 5 - II வரை | எண்: 07 எழுத்து: 08 ஆகஸ்ட் 2013 | www.aharam.lk

07 AUG 2013
PUBLIC LIBRARY JAFFNA

## கலர் கலராய்க் கலர்கள்



## டெய்லர் வில்ஸன்

## வித்தியாசமாக சிந்தியுங்கள்



மாதாந்த சிறுவர் சஞ்சிகை 40/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டவர் பாலம்
## (Tower Bridge)

அமைவிடம் : லண்டன், இங்கிலாந்து

இது தேம்ஸ் நதிக்கு ஊடறுத்து அமைக்கப்பட்டுள்ளது.

நீளம் : 224 மீற்றர்
திறப்பு : 1894





# மில்லோ பாலம்
## (Millau Viaduct)

அமைவிடம் : தென் பிரான்ஸ்

உலகின் மிக உயர்ந்த பாலம்

திறப்பு : 2004
செலவு : 400 மில்லியன் யூரோ

# அகாசி கைக்கியோ
## (Akshi kaikyo Bridge)

அமைவிடம் : ஜப்பான்
சிறப்புப் பெயர் : பவளப் பாலம்

இது உலகின் மிக நீளமான தொங்கு பாலம் ஆகும்.

திறப்பு : 1998 ஏப்ரல்
நீளம் : 3911 மீற்றர்
செலவு : 5 பில்லியன் அமெரிக்க டொலர்



# கோல்டன் கேட் பாலம்
## (Golden Gate Bridge)

அமைவிடம் : அமெரிக்காவின் சென் பிரான்ஸிஸ்கோ
நீளம் : 1.7 மைல்
உயரம் : 274 அடிகள்
அகலம் : 90 அடிகள்
திறப்பு : 1937 மே 27



# பொஸ்பரஸ் பாலம்
## (Bosphorus Bridge)

அமைவிடம் : துருக்கியின் ஸ்தான்பூல்

இது ஆசிய மற்றும் ஆபிரிக்க கண்டங்களை இணைக்கிறது.

திறப்பு : 1973 ஒக்டோபர் 30
உயரம் : 165 மீற்றர்
நீளம் : 1560 மீற்றர்



# சிட்னி துறைமுகப் பாலம்
## (Sydney Harbour Bridge)

அமைவிடம் : அவுஸ்திரேலியாவின் சிட்னி

இது சிட்னியின் மத்திய வர்த்தக நிலையத்தையும் வடக்கு கடலோரத்தையும் இணைக்கிறது.

திறப்பு : 1932
நீளம் : 503 மீற்றர்



# உலகின் விசித்திரமான பாலங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்: 07 ஆகஸ்ட், 2013 எழுத்து: 08

PUBLIC LIBRARY
JAFFNA

# உள்ளே...







கலர் கலராய்க் கலர்கள் 06



களைப்பு மற்றும் மிகையான தூக்கத்திலிருந்து விடுபட... 28




English with 13



வித்தியாசமாக சிந்தியுங்கள் 21




சர்வதேச இளைஞர் தினம் 16




கவிதைச் சரம் 37




மாணவர் அகரம் 09

## பாடத்திட்டம்



| | | | |
|---|---|---|---|
| கணிதம் | 30 | தமிழ் | 26 |
| விஞ்ஞானம் | 33 | புலமைப் பரிசில் | 38 |



**பிரதம ஆசிரியர்**
டாக்டர் ஆகில் அஹ்மட் ஷரிபுத்தீன்

**ஆலோசனைக் குழு**
அஷ்ஷெய்க் ஏ.ஸி. அகார் முஹம்மத் (நளீமி)
(பிரதிப் பணிப்பாளர், ஜாமிஆ நளீமிய்யா)

எம்.எச்.எம். ஹஸன் M.ED
(முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்)

ஜெஸீமா ஆதம் லெப்பை B.Sc
(விஞ்ஞானப் பிரிவு, தேசிய கல்வி நிறுவகம்)

**உதவி ஆசிரியர்**
ஜே.எம். அஸீம் (நளீமி)

**தளக் கோலம்**
எம்.ஐ.எம். ஹாரீஸ்

**தொடர்புகளுக்கு:**
**அகரம்**
77, தெமடகொட வீதி,
கொழும்பு - 09.
தொ.பே: 011 268 9324
பெக்ஸ்: 011 2686030
**E-Mail:** *editor@aharam.lk*
*www.aharam.lk*

**சந்தா விபரம்**
தனிப் பிரதி 40 /-
1 வருட சந்தா 700 /-
6 மாத சந்தா 350 /-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசு இரிதல்

தற்காலத்தில் என்றுமில்லாத நெருக்கடிகளுக்கு இலங்கை முஸ்லிம் சமூகம் ஆட்பட்டுவருகின்றது. ஒருபுறத்தில் முஸ்லிம்களின் சமயம் சார்ந்த நடவடிக்கைகளும் பள்ளிவாயல்களும் அச்சுறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றபோது மறுபுறத்தில் முஸ்லிம்களின் அன்றாட வாழ்வியலுக்கும் இடையூறு விளைவிக்கப்பட்டு வருகின்றது. மேலும் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற கிராமங்கள், ஊர்களிலும், தொழில் நிறுவனங்களிலும், கல்விக் கூடங்களிலும் முஸ்லிம் அல்லாத சமூக மக்களின் ஊடுருவல் அல்லது செறிவாக்கல் ஏற்படுத்தப்பட்டுவருகின்றது.

இச்செயன்முறைகள் முஸ்லிம் சமூகத்தில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என நம்மில் பலர் அங்கலாய்க்கின்றனர். அவதிப்படுகின்றனர். ஆனால் பாதகமானதாகக் கருதப்படும் இந்தச் சூழ்நிலையை முதலீடாக ஆக்கிக் கொள்வது பற்றி நேர்முறையான கருத்தாடல்கள் அரிதானதாகவே உள்ளன.

எந்தவொரு சமூகத்திலும் தீவிர கடும்போக்குவாதிகள் மிகவும் சொற்பமானவர்களே. இவர்களது நடவடிக்கைகளினால் அள்ளுண்டு செல்லும் மக்கள் தொகை கணிசமானது என்றாலும் நிதானமாகச் சிந்திப்பவர்கள், தர்க்க ரீதியாக அணுகுபவர்கள், அமைதியையும் உண்மையையும் தேடுபவர்கள்தான் மனிதர்களில் அதிகம். இதனைத்தான் பிறக்கின்ற குழந்தைகள் அனைத்தும் பித்ராவுடைய நிலையிலேயே பிறக்கின்றன என அல்குர்ஆன் சொல்கின்றது. இது மனிதனைப் படைக்கின்ற இறைவனின் வாக்கு அல்லவா?

இலங்கையில் மட்டுமல்லாது முழு உலகிலும் இஸ்லாமும் முஸ்லிம்களும் திட்டமிட்டு நசுக்கப்படுகின்ற சங்கதிகளை நாளாந்தம் நாம் சந்திக்கின்றோம். ஆனாலும் இஸ்லாத்தை அழிப்பதற்காக சூழ்ச்சி செய்பவர்களின் வீட்டுக் கதவுகளையே இஸ்லாம் தட்டித் திறந்து வருவதையும் நாம் அன்றாடம் அறிகின்றோம். ஆனால் அங்கு வாள்களோ ஆயுதங்களோ பேசவில்லை. மாறாக, அல்லாஹ்வின் தீனைப் பற்றிய தேடலுக்கு அறிவு ரீதியாகவும் பண்பாடு ரீதியாகவும் பதிலளிக்கப்படுகின்றது. உள்ளங்கள் ஆகர்ஷிக்கப்படுகின்றன. இதுதான் தடுப்பு இடமுடியாத இஸ்லாத்தின் வியாபித்தலுக்கு காரணமாகும்.

இன்று இலங்கையிலும் இத்தகைய ஒரு சூழ்நிலையே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இது தீவிரபோக்குக் கொண்டவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு அசாதாரண நிலைமை என்று மேலோட்டமாகத் தோன்றினாலும் ஆழமாக நோக்கினால் அல்லாஹ் அவனது மார்க்கத்தை வேகமாக நகர்த்துவதற்கும், அதனைச் சுமந்துகொண்ட முஸ்லிம்களைச் சோதிப்பதற்கும் சன்மானம் அளிப்பதற்கும் ஒரு களத்தை அமைத்திருக்கின்றான் என்றே தோன்றுகின்றது.

இஸ்லாத்தைப் பற்றிய விளக்கம் முஸ்லிம் அல்லாத மக்களினால் வேண்டப்படுகின்றது. சிலர் அதனை வெளிப்படையாகக் கேட்டபோதும் பலர் விடை காணும் மார்க்கம் தெரியாது மௌனமாக இருக்கின்றார்கள். இவர்களுக்கு அறிவாலும், பண்பாடுகளாலும் பதிலளிக்கப்பட வேண்டும்.

நாம் தனித்த 100 வீத சமூகமாக இருப்பதானது நம்மைப் பற்றி அடுத்தவர்கள் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பில்லாமல் செய்கின்றது. நம்முள் ஊடுருவுகின்ற ஏனைய சமூகத்து மக்களை எதிராளிகளாகக் கருதாமல் கலந்திருப்பதனையும் கணை தொடுப்பதனையும் வாய்ப்பாகக் கருதி நம்மைப் பற்றியும், நமது மார்க்கத்தைப் பற்றியும் அவர்களது சமூகத்துக்கு எடுத்துச் சொல்லுகின்ற தூதுவர்களாக அவர்களை நாம் ஆக்க வேண்டும். நமது அறிவுபூர்வமான கருத்தாடல்களாலும், பண்பாடும் ஒழுக்கமிக்க வாழ்க்கை முறையினாலும் அவர்களுக்கு நம்மைப் பற்றி அறிவூட்ட வேண்டும். இதுவே இன்று நம்முன் இருக்கும் பாரிய பொறுப்பாகும். இதன் மூலமே நாம் சூழ்ச்சிகளையும் சவால்களையும் வெல்ல முடியும்.

இந்த பெரும்பான்மை மக்களுக்கு அவர்கள் தேடுகின்ற அமைதியையும் உண்மையையும் அல்லாஹ் முஸ்லிம்களின் தோள்களிலே சுமத்தியிருக்கின்றான். இந்தச் சுமையைத்தான் மலைகள் சுமக்க மறுத்தன. இந்தப் பணிக்காக நமது சந்ததியின் ஒவ்வொரு அலகும் அறிவு, ஆன்மிகம், பண்பாடு, ஒழுக்கம், திறன் ஆகிய அனைத்திலும் திட்டமிட்ட அடிப்படையில் வளர்த்தெடுக்கப்பட வேண்டும். பொறுப்பு வாய்ந்தவர்கள் இதில் கவனம் செலுத்துவார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாழும் அற்புதம் அல்குர்ஆன்

# அல்குர்ஆன் கூறும் கதைகள்

## அஸ்ஹாபுஸ் ஸப்த்

## சனிக்கிழமை வாசிகள்

சனிக்கிழமை நாளில் வணக்க வழிபாடுகளில் ஈடுபடுமாறு பனூ இஸ்ராயீல் சமூகத்தினருக்கு அல்லாஹ் கட்டளையிட்டான். அத்தினத்தில் அவர்கள் முழுமையாக உலக வாழ்விலிருந்து விடுபட வேண்டும் என்பதும் அல்லாஹ்வின் ஏவலாகும். மீன்பிடித் தொழில் நடவடிக்கைகளிலோ, கொடுக்கல் வாங்கல்களிலோ அன்றைய தினம் (சனிக்கிழமை) ஈடுபடுவது அவர்களுக்கு ஹராமாக்கப்பட்டது. வாரத்தில் ஒரு நாள் மட்டும்தானே தொழில் விடயங்களை விட்டும் ஒதுங்க வேண்டும் என்பது அவர்களுக்கு பாதிப்பாகத் தெரியவில்லை. ஒரு நாளில் தானே இறைவணக்கம் என்பது அவர்களுக்கு மகிழ்ச்சியளித்தது. ஆனால் அதுவே அவர்களுக்கு பெரும் சோதனையாக மாறிவிட்டது.

பனூ இஸ்ராயீல் சமூகத்தின் நாட்கள் உருண்டோடின. சனிக்கிழமை தினத்தில் அவர்கள் வணக்க வழிபாடுகளில் ஈடுபடலாயினர். அவர்களது பிரதான தொழிலான மீன் பிடித் தொழிலே அவர்களுக்கு சோதனையாகிவிட்டது. சனிக்கிழமை தினத்தில் ஏராளமான மீன்கள் கரையோரம் வரத் தொடங்கின. ஒவ்வொரு சனிக்கிழமையும் மற்றெல்லா நாட்களை விடவும் மீன்கள் கூட்டம் கூட்டமாக வரத் தொடங்கின. அது அவர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது மட்டுமல்ல கவலையையும் ஏற்படுத்தியது. சனிக்கிழமை தினத்தில் உலகியல் நடவடிக்கையில் ஈடுபடுவது ஹராமல்லவா! அம்மீன்களைப் பிடிக்க முடியாதல்லவா! அதுதான் அவர்களுக்கு கவலையளித்த விடயம். சனிக்கிழமை நாளில் மட்டுமே கரையொதுங்கும் இம்மீன்களைப் பிடிக்க அவர்கள் திட்டம் தீட்டினர். அல்லாஹ்வின் வரம்பை மீறத் தந்திரம் செய்வதை அவர்கள் பாவம் என்று அவர்கள் எண்ணவில்லை.

சனிக்கிழமை தினத்தில் சாரி சாரியாக கரையொதுங்கும் மீன்களைப் பிடிப்பதற்காக வெள்ளிக்கிழமை நாளில் கரையோரமெங்கும் பெரிய கிடங்குகளை அவர்கள் தோண்டினர். மறு நாள் அவர்கள் இறை கட்டளைப் பிரகாரம் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டனர். ஞாயிறு அதிகாலை தோண்டப்பட்ட கிடங்குகளில் இருக்கும் மீன்களை குதுகலிப்புடன் அள்ளியெடுக்கத் தொடங்கினர். இச்செயல் பாவம் என்று அவர்கள் நினைக்கவுமில்லை. அவர்களோ தம்மை அல்லாஹ்வின் கட்டளையை மீறாதவர்கள் போலவே எண்ணிக் கொண்டனர்.

இப்படியொரு பெரும் பாவத்தை, இறை கட்டளையை காலால் மிதிக்கும் அநியாயத்தைக் கண்ட வணக்கவாளிகளில் ஒரு சாரார் விழித்துக் கொண்டனர். ஆகா! இது பாவமல்லவா வரம்பு மீறும் செயலல்லவா. இதை தடுக்காது விட்டால் இறை தண்டனைக்கு ஆளாக நேரும் என அவர்கள் அஞ்சினர். உடனடியாக காரியத்தில் இறங்கினர். எப்படியாவது இப்பாவத்தைத் தடுத்து நிறுத்துவது என தீர்மானித்தனர். தம்மோடு வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இன்னுமொரு குழுவினரை அணுகினர். தமது சமூகத்தார் அல்லாஹ்வின் வரம்பை மீறுகிறார்கள் என்ற செய்தியை கவலையோடு எடுத்துரைத்தனர். அவர்களோ அதனை பொருட்படுத்தவில்லை. உங்களுக்கு ஏன் தேவையில்லாத வேலை. நீங்கள் உங்களது வேலையை கவனியுங்கள். இதுவெல்லாம் எங்களுக்கு அவசியமற்றது என்று கூறினர்.

பாவத்தை தடுக்கத் துணிந்தவர்கள் மனம் தளரவில்லை. அல்லாஹ்வின் வரையறையை மீறுகின்ற தம் தோழர்களைச் சந்தித்தனர். அவர்கள் செய்கின்ற பாவத்தை உணர்த்தினர். அல்லாஹ்வின் வரம்பை மீறி தந்திர உபாயத்தை பயன்படுத்துவது பெரிய அநியாயம் என்பதை தெளிவாகவே கூறினர்.

20ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹதீஸ் பூங்காவிலிருந்து

ஏ.ஆர்.எம். ஸஜீத் (இஸ்லாஹி)

عَنْ أَنَسٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ قَدِمَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ الْمَدِينَةَ وَلَهُمْ يَوْمَانِ يَلْعَبُونَ فِيهِمَا فَقَالَ مَا هَذَانِ الْيَوْمَانِ قَالُوا كُنَّا نَلْعَبُ فِيهِمَا فِي الْجَاهِلِيَّةِ فَقَالَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ إِنَّ اللَّهَ قَدْ أَبْدَلَكُمْ بِهِمَا خَيْرًا مِنْهُمَا يَوْمَ الْأَضْحَى وَيَوْمَ الْفِطْرِ (أبو داود والنسائي)

அனஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் அறிவிக்கிறார்கள். நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மதீனா வந்தபோது மதீனா வாசிகள் இரு தினங்களைக் கொண்டாடி, விளையாட்டு வேடிக்கைகளில் ஈடுபடுவதைக் கண்டார்கள். அதற்கு நபியவர்கள் இந்த இரண்டும் என்ன தினங்கள் எனக் கேட்டார்கள். அதற்கு அவர்கள் இவை நாங்கள் ஜாஹிலிய்யாக் காலத்தில் கொண்டாடி, விளையாட்டுக்களில் ஈடுபட்ட தினங்கள் என்றனர். அப்போது நபியவர்கள் அல்லாஹ் இந்நாட்களுக்குப் பகரமாக இவற்றைவிடச் சிறந்த இரு நாட்களை தந்திருக்கின்றான். அவை ஈதுல் அழ்ஹாவும், ஈதுல் பித்ருமாகும் என்று கூறினார்கள். (அபுதாவுத், நஸாஈ)

இஸ்லாம் எமக்கு வழங்கியிருக்கின்ற இரு பெரு நாள் தினங்களுள் ஒன்றான நோன்புப் பெருநாளைக் கொண்டாடுகின்ற தருணத்தில் நாங்கள் இருக்கின்றோம். இஸ்லாத்தின் பார்வையில் பெருநாட்கள் ஏனைய சமயத்தவர்களதும், கலாசாரங்களினதும் பெருநாட்களைப் போன்றதல்ல.

ஒவ்வொரு சமுகத்தவர்களுக்கும் அவர்களது வரலாற்றோடு தொடர்புடைய ஏதேனும் ஒரு நிகழ்ச்சி பெருநாட்களுக்கான அடிப்படையாக அமைந்து காணப்படுகின்றது. ஆனால், இஸ்லாத்தில் பெருநாட்கள் இவற்றுக்கு மாற்றமாக தன்னிகரற்று விளங்குகின்றன.

அந்த வகையில் ரமழானைத் தொடர்ந்து வரும் ஈதுல் பித்ர், அல்லாஹ் தனது அடியார்களுக்கு அருள்மிகு நன்மைகள் நிறைந்த மற்றும் பரக்கத் பொருந்திய ரமழான் மாதத்தை வழங்கினான். அதேபோன்று நிம்மதியான வாழ்க்கைக்கான வழி காட்டலைத் தந்த அல்குர்ஆனை அருளினான். இவ்விரு மகத்தான அல்லாஹ்வின் அருள்களுக்காக அடியார்கள் ஒன்றிணைந்து அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் வண்ணம் ஈதுல் பித்ர் அமைந்துள்ளது.

எனவேதான், பெருநாள் தினத்தில் இம்மகத்தான அருட்களைப் பொழிந்த அல்லாஹ்வைக் கண்ணியப்படுத்தும் வகையிலும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் வண்ணமும் அல்லாஹ்வை அதிகமதிகம் திக்ர் செய்வதும் சப்தமாக தக்பீர் சொல்வதும் இஸ்லாத்தில் ஆகுமாக்கப்பட்டுள்ளது.

"நீங்கள் ரமழான் மாதத்தைக் கணக்கிட்டு, நோன்பை பூர்த்தியாக்க வேண்டும். (மேலும் இம்மாதத்தில்) அல்குர்ஆனை இறக்கி உங்களுக்கு அல்லாஹ் நேர்வழி காட்டியதற்காக தக்பீர் முழங்க வேண்டும். நீங்கள் நன்றியுள்ளவர்களாக மாறலாம்." (அல்பகறா: 185)

மேலும் மக்களிடையே பரஸ்பர அன்பையும் நல்லெண்ணத்தையும் வெளிப்படுத்தும் வண்ணம் வாழ்த்துக்களைப் பாமாறிக் கொள்வதுடன் ஆகுமான விளையாட்டுக்கள், பாவமில்லாத பொழுது போக்குகளிலும் ஈடுபடலாம்.

எமது உறவினர்களதும், நண்பர்களதும், அயலவர்களதும் வீடுகளுக்குச் சென்று அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்து அவர்களது நலம் விசாரிப்பதன் ஊடாக எமது உறவுப் பாலத்தை பலப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான இஸ்லாம் காட்டித்தந்துள்ள காரியங்களைச் செய்வதன் ஊடாக வேற்று மதத்தவர்களது பெருநாட்களிலிருந்து எமது பெருநாள் சிறப்புற்று காணப்படுவதுடன் இச்செயற்பாடுகள் நன்மை பெற்றுத் தரக் கூடியதாகவும் அமையப் பெறும்.

(20ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யார் பூமிக்கு மேல் நடமாடும் ஷஹீதைப் பார்க்க விரும்புகிறாரோ அவர் தல்ஹா இப்னு உபைதுல் லாஹ்வைப் பார்க்கட்டும்."

(ஸுனன் திர்மிதி, இப்னு மாஜா)

உஹத் போரின் இறுதிக் கட்டம்! நபியவர்களைச் சுற்றிக் கடும் போர்; குறைஷிகள் நபியவர்களைச் சூழ்ந்து நின்று தாக்கினர். அப்போது 07 அன்சாரித் தோழர்களும் 02 குறைஷித் தோழர்களுமே நபியர்களைச் சுற்றி நின்று பாதுகாத்தனர். அவர்களுள் ஒருவராக நின்று போராடியவர்தான் தல்ஹா இப்னு உபைதுல்லாஹ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள். அவர்கள் வீரத்துடனும் தீரத்துடனும் போரிட்டார்கள். அவர்களது கையில் பல வெட்டுக்கள் விழுந்தன. சில விரல்கள் துண்டிக்கப்பட்டன. இப்படிப் போராடிய ஒருவரை எப்படிப் புகழாமல் இருக்க முடியும்!

அன்ஹு) அவர்கள் தல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களைப் போலவே சமநேரத்தில் நின்று உஹத் களத்திலே நபியவர்களை இறுதிவரை எதிரிகள் தாக்காமல் போராடியவர். அவரையும் பாராட்டவும் உற்சாகப்படுத்தவும் நபியவர்கள் தவறவில்லை.

ஸஅது இப்னு அபீவக்காஸ் (ரழியல்லாஹு அன்ஹு), தல்ஹா இப்னு உபைதுல்லாஹ் (ரழியல்லாஹு அன்ஹு) ஆகிய இருவரும் அம்பெறிவதில் தேர்ச்சி பெற்றவர்கள். உஹத் களத்தின் இறுதிக்கட்டத்தில் நபியவர்களை எதிரிகள் தாக்காமல் போரிட்டவர்கள். இவர்களை நபிகளார் அருமையாகப் பாராட்டி உற்சாகப்படுத்தினார்கள்.

நபியவர்களைச் சுற்றி கடுமையான போர் நிகழ்வதையறிந்து படையின் முன் அணியிலிருந்து போரிட்டுக் கொண்டிருந்த தோழர்கள் நபியவர்களை நோக்கி விரைந்தனர். அவர்களில் முதலாமவராக

# பாராட்டுதல்:

# உற்சாகப்படுத்தலின் உந்து சக்தி

வீரத்துடனும் தீரத்துடனும் போராடிய அந்த ஸஹாபியைப் பார்த்து நபியவர்கள் கூறிய வார்த்தைகள்தான் அவை. அந்த வார்த்தைகளைவிட ஒரு மனிதனைப் புகழ்ந்து உற்சாகப்படுத்தும் வார்த்தைகள் வேறு எதுவாக இருக்க முடியும்! "பூமியில் நடமாடும் ஷஹீத்'' எத்துனை அருமையான பாராட்டு, உற்சாகப்படுத்தல். எமக்கு உதவி செய்கின்றவர்களை நாம் எத்தனை தடவைகள் வஞ்சகமின்றி புகழ்ந்து பாராட்டி உற்சாகப்படுத்தியிருப்போம்!

"ஸஅதே! நீ அம்பெறிவாயாக, எனது தாயும் தந்தையும் உனக்கு அர்ப்பணமாகட்டும்.''

ஸஅது இப்னு அபீவக்காஸ் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களுக்கு தனது அம்புக் கூட்டைக் கொடுத்து நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் கூறிய வார்த்தைகள் இவை. ஸஅத் இப்னு அபீ வக்காஸ் (ரழியல்லாஹு

அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் திகழ்ந்தார்கள். இந்நிகழ்வை தனக்கு விபரித்ததாக அபூபக்ர் (ரழியல்லாஹு அன்ஹு) அவர்களின் மகளான ஆஇஷா (ரழியல்லாஹு அன்ஹா) அவர்கள் விபரிக்கிறார்கள்.

"உஹத் போர் அன்று மக்கள் நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களை விட்டும் பல திசைகளில் சிதறி விட்டனர். பின்பு நான்தான் முதலில் நபியவர்களிடம் விரைந்தேன். அப்போது அவர்களுக்கு முன் ஒருவர் அவர்களைப் பாதுகாத் தவராக எதிரிகளிடம் சண்டை செய்து கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

நான் என் மனதில் நீ தல்ஹாதானே! எனது தந்தையும் தாயும் உனக்கு அர்ப்பணமாகட்டும். நீ தல்ஹாதானே! எனது தந்தையும் தாயும் உனக்கு

(27ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலிப் அலி (இஸ்லாஹி)
www.aliaalif.tk / aalifali@gmail.com



# கலர் கலராய்க் கலர்கள்

நாம் பார்க்கும் திசையெல்லாம் அழகுறக் காட்சியளிக்க முக்கிய காரணம் அல்லாஹ் அவனது படைப்புகள் அனைத்தையும் பல்வேறு நிறக் கலவையால் படைத்திருப்பதால் தான். பறவைகள், மிருகங்கள், பூச்சிகள், தாவரங்கள், புற்பூண்டுகள், தரைத் தோற்றங்கள் என அனைத்திலும் இறைவன் தீட்டிய வர்ணங்களின் மகிமையைக் கண்டு கொள்ள முடியும். மனிதன் செயற்கையாகச் செய்யும் பொருட்களிலும் கூட வர்ணங்கள் முதலிடம் பெறுவதை அவதானிக்கலாம். அல்லாஹ் திருக்குர்ஆனிலும் பல்வேறு இடங்களில் நிறங்கள் பற்றிக் கூறி அவனது படைப்புகளை பல்வேறு நிறங்களில் படைத்திருப்பதாகவும் அதுபற்றி சிந்திப்பவர்களுக்கு அத்தாட்சிகள் இருப்பதாகவும் கூறுகின்றான்.

**"நிச்சயமாக அல்லாஹ் வானத்திலிருந்து மழையை இறக்குவதை நீர் பார்க்கவில்லையா? பின்னர் நாமே அதனைக் கொண்டு பல விதமான நிறங்களுடைய கனிகளை வெளியாக்கினோம். மலைகளிலிருந்து வெண்மையானதும், சிவந்ததும், பற்பல நிறங்களை யுடைய வித விதமான பாதைகளும் சுத்தக் கரிய நிறமுடையனவும் உள்ளன. இவ்வாறே மனிதர்களிலும், ஊர்வனவற்றிலும், கால் நடைகளிலும், பல நிறங்கள் இருக்கின்றன. நிச்சயமாக அல்லாஹ்வின் அடியார்களில் அவனுக்கு அஞ்சுவோரெல்லாம் அறிஞர்கள்தாம்."**

***(35:27, 28)***

**"மேலும் வானங்களையும், பூமியையும் படைத்திருப்பதும் உங்களுடைய மொழிகளும் உங்களுடைய நிறங்களும் வேறுபட்டிருப்பதும், அவனுடைய அத்தாட்சிகளில் உள்ளவையாகும். நிச்சயமாக இதில் அகிலத்தாருக்கு அத்தாட்சிகள் இருக்கின்றன." *(30:22)***

## நிறம் எவ்வாறு தோன்றுகின்றது?




ஒளிக்கதிர் ஒன்று பொருளொன்றின் மீது பட்டுத் தெறிப்படைந்து அது நமது கண்களை வந்தடைவதால்தான் அப்பொருள் எமது கண்களுக்குப் புலப்படுகிறது. நாம் வாழும் புவியை பொறுத்தவரை ஒளியின் மூலம் சூரியனாகும். அடிப்படையில் சூரிய ஒளி "வெள்ளொளி" எனப்படுகிறது. இதில் ஏழு நிறங்கள் கலந்திருப்பதாக விஞ்ஞானி ஐசக் நியுட்டன் (1671இல்) முதலாவதாகக் கண்டறிந்தார். இந்த ஏழு நிறங்களும் சேர்ந்தே இந்த உலகில் பல கோடி வண்ண மாயா ஜாலங்களைப் புரிந்துவருவதாக அவர் நம்பினார்.

சிவப்பு (Red), செம்மஞ்சள் (Orange), மஞ்சள் (Yellow), கரு நீலம் (Indigo), பச்சை (Green), நீலம் (Blue) ஊதா (Violet) என்பனவே அந்த அடிப்படை ஏழு நிறங்களுமாகும். சூரிய ஒளியிலிருந்து தோன்றும் வானவில் கூட இந்த ஏழு நிறங்களையும் வெவ்வேறாகப் பிரதிபலிப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள். ஓர் அரியத்தினூடாக ஒளியைப் பாய்ச்சும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அவ்வொளி ஏழு நிறங்களையும் வெவ்வேறாகப் பிரித்து வெளிப்படுத்து வதை செய்முறையூடாகவும் அவதானிக் கலாம். சிலர் அடிப்படை நிறங்கள் மூன்று என்றும் கூறுவர். என்றாலும் விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்டது ஏழு என்ப தேயாகும்.

அடிப்படை நிறங்கள் ஏழு என விஞ் ஞானம் கூறுவதற்கு பல நூற்றாண்டுக ளுக்கு முன்னரே அல்குர்ஆன் இதனை சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளது. அரபு மொழியில் நிறத்தைக் குறிக்க, "லவ்ன்" என்ற பதமும் அதன் பன்மை வடித்தில் நிறங்கள் என்பதைக் குறிக்க, "அல்வான்" என்றும் பயன்படுத்தப்படுகிறது. அல்குர் ஆனில் நிறங்கள், "அல்வான்" என மொத் தமாக ஏழு தடவைகள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

சூரியனிலிருந்து புவியை நோக்கி வரும் பல்வேறு கதிர்களில் ஒரு சிறு பகுதி மட்டுமே பூமியின் மேற்பரப்பை அடைகின்றன. புவியை அடையும் கதிர் கள் அனைத்தையும் எம்மால் பார்க்க முடியாது. அவற்றிலும் சில கதிர்கள் மட்டுமே எமது கண்களுக்குத் தெரி கின்றன. கண்ணுக்குப் புலப்படக்கூடிய கதிர்கள்கூட வெறும் 400 தொடக்கம் 700 நனோமீற்றர் (Nanometer) அலை நீளத்திற்கு உட்பட்டவையாகும். (நனோ மீற்றர் என்பது ஒரு மீற்றரை ஒரு பில்லி யனால் பிரித்தால் வரும் மிக நுட்பமான பகுதியாகும்.) இந்தக் கதிர்களின் ஒரு முனையில் சிவப்பு நிற ஒளியும், மறு முனையில் ஊதா நிற ஒளியும் உள்ளன.

## அல்லாஹ்வின் அற்புதமான படைப்பு

இந்த அடிப்படையான ஏழு கதிர்கள் அல்லாது இன்னும் கோடிக்கணக்கான, எமது கண்களுக்குப் புலப்படாத கதிர்கள் இப்பிரபஞ்சத்திலும் எம்மைச் சூழவும் இருக்கின்றன என்பதை நீங்கள் புரிந்தி ருப்பீர்கள். தற்போது அல்லாஹ்வின் ஒரு படைப்பு பற்றி விளங்க முயற்சிப்போம். அல்லாஹ் மலக்குமார்களை ஒளியால் படைத்திருக்கின்றான். ஒளி என்பது ஒரு கதிர்தான். எனவே, மலக்குகள் 400-700 நனோமீற்றருக்கு அப்பாற்பட்ட கதிர் வீச்சினால் படைக்கப்பட்டவர்களாக இருக்கலாம். எனவே தான் அவர்கள் எமது பக்கத்தில், எம்மைச் சூழ இருந்தபோ திலும் எம்மால் அவர்களைப் பார்க்க முடியாதுள்ளது. ஜின் கள் நெருப்பின் சுவாலையால் படைக்கப்பட்டதொரு இனம் என்பதாலும் அவற்றையும் எமது "ரூஹ்" ஆன்மாவையும் நமது கண்களால் காணமுடியாதிருக்க இதுவும் ஒரு காரண மாக இருக்கலாம்.

இறை மறுப்பாளர்கள் கூறுவதுபோன்று கண்களால் காண முடியாது என்பதற்காக மலக்குகளோ, ஜின்களோ இல்லை என்று ஆகிவிடாது. அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர் களைப் பார்க்கக்கூடிய சக்தி எமது பார்வைப் புலனுக்கு வழங்கப்படவில்லை என்பதுதான் உண்மை. அதனால்தான் ஸினாய் மலையில் வைத்து நபி மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அல்லாஹ் விடம், "உன்னைப் பார்க்க வேண்டும்" என்று கூறியபோது, "நீர் என்னைப் பார்க்க முதல் இந்த நெருப்பைப் பாரும். அதனைப் பார்க்க உம்மால் முடிந்தால் என்னைப் பார்க்கலாம்" என்று கூறி ஒரு நெருப்புக் குண்டத்தை அல்லாஹ் உருவாக்கினான். அதனைப் பார்க்க முடியாமல் மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் மயக்கமுற்று கீழே விழுந்தார்கள். இவ்வுலகில் பார்வைச் சக்தி 400nm முதல் 700nm என்ற அளவில் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் இங்கு மலக்குகளையோ, ஜின்களையோ பார்க்க முடியாது.



ஒருவகையில் இந்த மட்டுப் படுத்தப்பட்ட பார்வைப் புலன் அல்லாஹ்வின் அருளாகும் ஏனெனில் எல்லா கதிர்களை யும் பார்க்கும் சக்தியை அல் லாஹ் இக்கண்களுக்குத் தந்தி ருந்தால் எக்ஸ் கதிர்கள் (X-Ray), கழியூதாக் கதிர்கள் (Ultra Violet Rays), காமாக் கதிர்கள் (Gamma Rays), கொஸ் மிக் கதிர்கள் (Cosmic Rays) என எல்லாக் கதிர்களும் எமது பார்வையில் தெரிந்திருக்கும். நமது உடலை எக்ஸ்ரே (X-Ray) எடுத்துப் பார்த்தால் எப்படி எலும்புகள் மட்டும் தெரிகின்றதோ அதேபோன்று பார்ப்ப வையெல்லாம் அழகின்றி பயங்கரமாக, எலும்புகளாகவே காட்சியளிக்கும். மட்டுப்படுத்தப்பட்ட பார்வைச் சக்தி யால்தான் தற்போது பார்ப்பவை அழகாகத் தோன்று கின்றன.

ஆனால், நாம் மரணிக்கும் போது (ஸகராத் நிலையில்) அல்லாஹ் எமக்கு பிற கதிர்களையும் நிறங்களையும் பார்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியைத் தருகின்றான். அதனால்தான் ரூஹைக் கைப்பற்ற வரும் மலக்கையும் மண்ணறையில் நன்மாராயம் கூறும் அல்லது வேதனை செய்யும் மலக்குகளையும் எமது 'ரூஹ்' பிரிந்து செல்வதையும் பார்க்க முடிகின்றது. இங்கு மூஸா நபியால் பார்க்கச் சக்தி பெறாத அல்லாஹ்வை சுவ னத்தில் பார்க்க முடிவதும் மரணத்துடன் அல்லாஹ் எமது பார்வைக்கு தற்போதிருப்பதைவிட மேலதிகமான சக்தி யைத் தருவதால்தான்.

பிரபஞ்சத்தில் அதிக வேகத்தில் பயணிக்கும் பொருள் ஒளி என்றும், ஒளி செக்கனுக்கு 300,000Km வேகத்தில் பய ணிக்கிறது என்றும் நவீன விஞ்ஞானம் கண்டறிந்துள்ளது. மலக்குகளும் ஒளியால் படைக்கப்பட்டவர்கள் என்றவகை யில் அவர்களும் ஒளிக்கு சமாந்திரமான கதியில் பயணிக்கி றார்கள் என்பதை இஸ்லாமிய அறிஞர்கள் பின்வரும் மூன்று *(32:5,70:4,10:5)* அல்குர்ஆனிய வசனங்களையும் அடிப்படையாகக் கொண்டு நிறுவுகின்றனர்.

*(பார்க்க : அல்ஹஸனாத் 2006 / டிசம்பர் / பக்.36)*

## உளவியலில் நிறம்

மனிதனின் உணர்வுகள் மற்றும் நடத்தைகளில் நிறம் எவ் வாறு சம்பந்தப்படுகிறது என்பதைப் பற்றி கற்கும் கற்கைக்கு நிற உளவியல் (Colour Psychology) என்று கூறப்படுகிறது. ஒவ்வொருவருக்கும் மிகவும் பிடித்தமான ஏதோ ஒரு நிறம் இருக்கும். அந்த நிறம் விழித் திரையை அடைந்து மின் தூண்டல்களாக மாற்றப்பட்டு பார்வை நரம்புகளினூடாக மூளைக்குக் கடத்தப்படுகின்றன. பின்னர் அங்கு அது ஒரு அதிர்வை (Vibration) உண்டாக்கும். அது அவருக்குப் புத்து ணர்ச்சியை அளிக்கும். அதனால்தான் பூந்தோட்டங்களுக்கு நாம் சென்றால் இனம் தெரியாதவொரு மன நிம்மதியும், புத்துணர்ச்சியும் எம்மை ஆட்கொள்கின்றது.

அதேபோன்று ஒருவருக்கு பிடிக்காத நிறங்களும் உண்டு. அது அவரை வெறுப்படையச் செய்யும். கருப்பு நிறத்திற்கு அஞ்சுபவர்கள் இருக்கின்றனர். ஒருவருக்குப் பிடித்த, பிடிக் காத நிறங்களை வைத்து ஒருவரது உள்ளத்தின் தன்மையை, அவரது ஆளுமையை இனங்காணும் முறை உளவியலில் உள்ளது. மனிதனுக்கு மட்டுமன்றி தாவரங்கள், விலங்குகள், பூச்சிகள் என அனைத்தும் ஏதோ ஒரு நிறத்தினால் தூண்டப் படுவதாக உளவியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர். நிற உளவியலில் ஆபத்தைக் குறிக்கும் நிறங்களாக மஞ்சளும் கருப்பும் காணப்படுகின்றன. இவ்வாறு ஒவ்வொரு நிறமும் ஓர் உளவியல் கருத்தைக் கூறுகின்றது.

## நிறம் பற்றி அல்குர்ஆன்

நபியவர்கள் வெள்ளை நிறத்தை அதிகம் விரும்பினார்கள். கருப்பு நிறத்தையும் காவி நிறத்தையும் தவிர்ந்து கொள்ளு மாறு கூறினார்கள். விஞ்ஞானம் அடிப்ப டையில் 7 நிறங்கள் உள்ளதாகக் கூறுகி றது. அல்குர்ஆன் நிறங்கள் என்ற வார்த் தையை 7 இடங்களில் பயன்படுத்தி யுள்ளது. சுவனம் பசுமையானது என்று கூறும் இஸ்லாம் அதன் நிறமான பச்சை நிறம் அல்குர்ஆனில் 8 இடங்களில் பிரயோகிக்கப்பட்டுள்ளது. நபியவர்கள் சுவனத்தின் வாயில்கள் 8 என்றும் கூறியுள்ளார்கள். அதேபோன்று கறுப்பு நிறம் அல்குர்ஆனில் 7 இடங்களில் வந்துள்ளது. நரகின் நிறமும் கறுப்பு என் பதாக நபியவர்கள் கூறினார்கள். அதன் வாயில்களின் எண்ணிக்கையும் 7 என்று அல்குர்ஆன் கூறுகின்றது. மஞ்சள் நிறம் 5 தடவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது. அல்குர்ஆனில் அதிகமாகப் பேசப்பட் டுள்ள நிறம் வெள்ளையாகும்.

இம்முழுப் பிரபஞ்சமும் தற்செயலாக தோன்றியது என்று கூறும் டாவினிஸவா திகள் ஒவ்வொரு படைப்பிலும் காணப் படும் வர்ண ஜாலங்களைப் பார்த்து வியக்கின்றனர். சாதாரணமாக மனிதன் தயாரிக்கும் ஒரு வீட்டிற்கே பல கடின முயற்சிகளால் பல்வேறு நிறங்களைத் தீட்டி அழகுபடுத்துகின்றான். அப்படி யானால் இப்பாரிய உலகம் மட்டும் எவ் வாறு தற்செயலாக, அழகாக வர்ணம் பெற்று வந்திருக்க முடியும்? இல்லை, நிச்சயமாக இது வல்லவன் அல்லாஹ் வின் ஒப்பற்ற படைப்பாற்றலின் வல்ல மைதான். அவனது அற்புதப் படைப் பாற்றின் வண்ணங்களால்தான் இவ்வுலகம் நிறம் பெற்றிருக்கிறது என்பதற்கு நிறங் களே சாட்சி.

***"இன்னும், பூமியில் அவன் படைத் திருப்பன பல விதமான நிறங்களை யுடைய (செடி கொடிகள், பிராணிகள், பறவைகள், போன்ற)வையுமாகும். நிச்சயமாக இதில் (அல்லாஹ்வின் அருட்கொடைகளை நன்றியுடன்) நினைவுகூரும் மக்களுக்கு(த் தக்க) அத்தாட்சியுள்ளது." (16:13)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இலங்கை பற்றிய சிறப்பான தகவல்கள்



☆ நெல் அதிகமாகப் பயிரிடப்படும் மாவட்டம் - குருநாகல்
☆ முதல் பல்கலைக்கழகம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
☆ இலங்கையின் வரலாற்றைக் கூறும் நூல்கள் - மகாவம்சம், தீபவம்சம், சூலவம்சம்
☆ இலங்கையின் மிகப் பெரிய புத்தர் சிலை - மாளிகாவில்லை, மிகிந்தலை
☆ பாய் பின்னலுக்கு பிரசித்தி பெற்ற கிராமம் - தும்பறை
☆ முதலில் வெளியிடப்பட்ட பத்திரிகை - கொழும்பு ஜேணல் (ஆங்கிலம்)
☆ கடற் கோட்டை அமைந்துள்ள இடம் - மன்னார்
☆ ஆறுகள் இல்லாத ஒரே இடம் - யாழ்ப்பாணம்
☆ இலங்கையின் மிக நீளமான பாலம் - கிண்ணியாப் பாலம்
☆ மகாசேனன் வெட்டிய குளங்களில் மிகப்பெரிய குளம் - மின்னேரியா

**நிஸ்தார் உஸ்மான்,**
**தரம் - 5**
**அல் பலாஹ் மு.வி, நீர்கொழும்பு.**

---

| முக்கிய நிகழ்வுகள் | நிகழ்ந்த ஹிஜ்ரி ஆண்டு |
|---|---|
| ▶ பத்ர் யுத்தம் | ஹிஜ்ரி - 02 |
| ▶ உஹத் யுத்தம் | ஹிஜ்ரி - 03 |
| ▶ அகழி யுத்தம் | ஹிஜ்ரி - 05 |
| ▶ ஹுதைபியா உடன்படிக்கை | ஹிஜ்ரி - 06 |
| ▶ கைபர் யுத்தம் | ஹிஜ்ரி - 07 |
| ▶ மக்கா வெற்றி | ஹிஜ்ரி - 08 |
| ▶ தபூக் யுத்தம் | ஹிஜ்ரி - 09 |
| ▶ ஹஜ்ஜதுல் வதா | ஹிஜ்ரி - 10 |
| ▶ நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) வபாத் | ஹிஜ்ரி - 11 |



**பாத்திமா ரிஸாமா**
**அக்/ ஆஇஷா பெ.ம.வி.**
**அட்டாளைச்சேனை**

## இமாம்கள் பற்றிய குறிப்புகள்

| இமாம் | இயற்பெயர் | தந்தையின் பெயர் | பிறப்பு | இறப்பு | சிறப்புப் பெயர் |
|---|---|---|---|---|---|
| அபூ ஹனீபா (ரஹ்) | நுஃமான் | ஸாபித் | ஹிஜ்ரி 80 கூபா | ஹிஜ்ரி 150 கூபா | இமாமுல் அஃழம் |
| மாலிக் (ரஹ்) | மாலிக் | அனஸ் | ஹிஜ்ரி 94 மதீனா | ஹிஜ்ரி 179 மதீனா | இமாமுல் மதீனா |
| ஷாபி (ரஹ்) | முஹம்மத் | இத்ரீஸ் | ஹிஜ்ரி 150 காஸா | ஹிஜ்ரி 204 எகிப்து | ஆலிமுல் குறைஷ் |
| அஹ்மதிப்னு ஹன்பல் (ரஹ்) | அஹ்மத் | முஹம்மத் | ஹிஜ்ரி 164 பக்தாத் | ஹிஜ்ரி241 | பக்தாத் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனித உடல் பற்றிய தகவல்கள்



| | |
|---|---|
| மனிதனின் சராசரி நாடித் துடிப்பு | : நிமிடத்திற்கு 72 தடவைகள் |
| மிக நீண்ட எலும்பு | : தொடை எலும்பு |
| மிகச் சிறிய எலும்பு | : காதிலுள்ள எலும்பு (3mm) |
| எலும்புகளின் மொத்த எண்ணிக்கை | : 206 |
| மிகப் பெரிய சுரப்பி | : ஈரல் |
| மிகப் பெரிய அங்கம் | : தோல் |
| முதலில் உறங்கும் உறுப்பு | : கண்கள் |
| முதலில் இறக்கும் பகுதி | : மூளையின் கலங்கள் |
| மிக வலிமையான தசைப் பகுதி | : நாக்கு |
| மனிதனின் சராசரி வெப்பநிலை | : 98.4°f / 36.8°C |

அம்னா அமான், தரம் - 8F
அல்கஸ்ஸாலி ம.க.
அடுலுகம.



## சிந்தனைக்குச் சிறு துளிகள்...

வயல்களுக்கு கேடு களைகள்
மனிதர்களுக்கு கேடு ஆசைகள்.

நல்லவற்றை அமைதியாகச் செய்
வேண்டுமானால் பிறர் அதை சத்தம்
போட்டுப் பேசட்டும்.

அமைதி சிந்தனையைத் தூண்டும்
சத்தம் சிந்தனையைச் சிதைக்கும்,

கோபம் அன்பை அழிக்கிறது
செருக்கு அடக்கத்தை அழிக்கிறது...

**எம்.எஸ்.எப். சஸ்னா**
**பாத்திமா ஸஹ்றா மகளிர் அரபுக் கல்லூரி**

| | |
|---|---|
| இலங்கையின் முதல் பிரதமர் | – டீ.எஸ். சேனா நாயக்க |
| சீனப்பெருஞ் சுவரைக் கட்டிய மன்னன் | – ரிசன்சி |
| இந்தியாவின் முதல் விண்வெளி வீரர் | – ராகேஸ் சர்மா |
| விலை உயர்ந்த உலோகம் | – பிளட்டினம் |
| 9 நிறங்களைக் கொண்ட பறவை | – பித்தா |
| விபுலானந்தர் இயற்றிய சிறந்த நூல் | – யாழ் நூல் |
| ஆங்கில அகராதியைத் தொகுத்தவர் | – சாமுவேல் ஜோன்ஸன் |
| நிமோனியா பாதிக்கும் உடலின் பகுதி | – நுரையீரல் |
| சீகிரியா கோட்டையைக் கட்டிய மன்னன் | – காசியப்பன் |
| நோபல் பரிசு பெற்ற முதல் பெண் | – மேரிகியூரி |



## பொது அறிவு

**ஆர். அப்ரார் அஹமட், தரம் - 07**
**அ/ இகளப் புளியன் குளம் மு.வி.**
**மரதன்கடவல**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உங்களுக்கு மட்டும்

▶ நூர்டீன் ஆசிக்



- நீருக்கடியில் செல்லும்போது சுவாசிக்க உதவும் கருவி – **ஸ்கூபா**
- உலகிலேயே அதி வெப்பமான பிரதேசம் – **லிபியா நாட்டிலுள்ள அல்அசீசியா**
- உலகிலே மிகவும் குளிர்ந்த இடம் அமைந்துள்ள நாடு – **சைபீரியா**
- முதன் முதலில் காகிதத்தினால் தாள்காசு அச்சிட்ட நாடு – **சீனா**
- உலகிலேயே அதிக வயதில் பிரதமரானவர் – **மொரார்ஜி, பதவி ஏற்ற ஆண்டு 1977 அப்போது வயது 81**
- முதன் முதலில் நினைவுத் தபால் முத்திரை வெளியிட்ட நாடு – **அமெரிக்கா (ஆண்டு 1893)**
- மனிதனுடைய செவிப்பறையால் அதிகபட்சம் தாங்க முடியுமான அளவு – **130 டெசிமல்**
- தொலைக்காட்சியில் பயன்படுத்தும் அடிப்படை நிறங்கள் – **பச்சை, நீலம், சிவப்பு**

# பரக்கீட்



'பரக்கீட்' எனப்படும் நீண்ட சிறகுகள் கொண்ட சிறு கிளிகள் அவுஸ்திரேலியாவின் மழை இல்லாத சமவெளிகளில் உயிர் வாழ்கின்றன. இவை தாம் உட்கொள்ளும் தாவர விதைகளிலிருந்து தமக்குத் தேவையான நீரைப் பெற்றுக் கொள்கின்றன. இவை அதிக நீரற்ற கோடை காலங்களில் முப்பது நாட்கள் வரை உயிர் வாழக்கூடிய திறனைக் கொண்டவை.

இச்சிறு பறவைகள் தாம் வாழும் தட்ப வெப்ப நிலைக்கேற்ப தம் வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றன. இவை நீர் இல்லாத காலத்தில் முட்டையிட்டு குஞ்சு பொரிப்பதை நிறுத்திக் கொள்கின்றன. பின் நீர் உள்ள புதியதோர் இடத்தைத் தேடத் தொடங்குகின்றன. நீர் இருக்கும் இடத்தைக் கண்டு கொண்டதும், அங்கு கூடு கட்டி, முட்டையிட்டு அடைகாக்க ஆரம்பிக்கின்றன. சுமார் முப்பது நாட்கள் வரை நீர் அருந்தாமல் வாழக்கூடிய ஆற்றலை இவற்றுக்கு வழங்கிய அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும்.

**ஏ.எல்.எம். பயாஸ்**
**தரம் – 08பு**
**பொ/ அல்ஹிலால் ம.க.**

# வினா விடை



1. ஜேர்மனியை கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி எனப் பிரித்த சுவர் எது? பேர்லின் சுவர்
2. அமெரிக்காவின் பாராளுமன்றம் எவ்வாறு அழைக்கப்படும்? காங்கிரஸ்
3. துருக்கியின் தலைநகரம் எது? அங்காரா
4. அமெரிக்காவின் இராணுவத் தலைமையகம் எது? பென்டகன்
5. நவீன ஓவியங்களின் தந்தை யார்? பிகாசோ
6. நாக மரத்தின் விஞ்ஞானப் பெயர் என்ன? மெசுவா நாக சூரியம்
7. உலகப் புகழ் பெற்ற மொனாலிசா ஓவியத்தின் பெயர் என்ன? லாஜியா கொண்டா
8. ரூபாய் 90 நோட்டு அச்சடிக்கும் நாடு எது? மியன்மார்
9. உளவியலின் தந்தை யார்? சிக்மன் பிறெய்ட்
10. ஆட்சி மாற்றம் இல்லாத நாடு எது? மெக்சிகோ

**எம்.ஜே.எம். ஆஸிக்**
**தரம் – 09**
**சிறாஜ் அரபுக் கல்லூரி, ஓட்டமாவடி – 01**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அகரம்



# வீர மொழிகள்



எப். நாதியா, தரம் – 10
பேருவளை

- ⇨ இறைவனை நம்பு! அதே நேரத்தில், துப்பாக்கியையும் சரிபார்த்துக் கொள். **(ஒலிவர் கிராம்வேல்)**
- ⇨ மனிதன் தோல்லி அடையமாட்டான்; அவனை மடக்கக் கூடியது ஒன்றே ஒன்றுதான். அதுவே, மரணம். **(மார்க்ஸிம் கார்க்கி)**
- ⇨ கோழையாக வாழ்வதை விடவும் போராடிச் சாவது மேல். **(காந்தி )**
- ⇨ வீரனுக்கு நாடு சொந்தம். கோழைக்கு சுடுகாடு சொந்தம். **(நெப்பொலியன் )**
- ⇨ உற்ற சமயத்தில் உயிரை விடுவதற்குத் துணிவில்லாதவன், வாழ்வு எது என்பதையே அறியாதவனாவான். **(ரஸ்கின் )**
- ⇨ ஒரு நூற்றாண்டு ஒப்புக்காக உயிர் வாழ்வதை விட, ஓரிரு மணி நேரம் உயிர்த்துடிப்புடன் சிறக்க வாழ்வதுதான் வெற்றி நிறைந்த வாழ்வு. **(விவேகானந்தர் )**
- ⇨ முழந்தாள் இட்டுக் கொண்டு உயிரோடிருப்பதைவிட, நிமிர்ந்து நின்ற வண்ணம் உயிரை இழப்பது மேல். **(மாஜினி)**
- ⇨ படுக்கையில் சாவதைவிட, நின்று சாவது எவ்வளவு மேல். **(பீகால் )**

# சிந்தனைத் துளிகள்...



- கற்கள் என்பதற்காக யாரும் அவற்றை ஒதுக்கி விடுவதில்லை. நீ ஓர் அறிவுள்ள கலைஞனாக இருந்தால் கற்களைப் பயன்படுத்தி அழகான கட்டடங்களைக் கட்டியெழுப்பலாம்.
- தன்னால் முடியும் என்பது நம்பிக்கை. தன்னால் மட்டும் தான் முடியும் என்பது தலைக்கணம்
- அதிகம் சிரிக்காதே, அப்படிச் சிரித்தால் உன் முகத்திலிருக்கும் பிரகாசம் மங்கி விடும்.
- வெட்டியாய்ப் பேசினால் வேலையை இழப்பாய், வேகமாய்ப் பேசினால் அர்த்தத்தை இழப்பாய்.
- சகிப்புத் தன்மையும். விடா முயற்சியும். அறிவுத் திறனும் எப்போதும் ஒருவனைத் தாழ விடாது.
- உன்னை அதிகமாகப் புகழ்பவன் ஏற்கனவே உன்னை ஏமாற்றி விட்டான் அல்லது ஏமாற்ற விரும்புகின்றான்.
- அன்புக்குக் கட்டுப்படுபவன் பணத்திற்கு ஆசைப்பட மாட்டான்.
- கல்வி எனும் பாதையில் கல்லுண்டு, முள்ளுண்டு; அதைக் கடந்து சென்றால் முன்னேற வழியுண்டு.
- ஆசை உள்ளவனுக்கு துன்பம் அதிகமாகும்.
- இலட்சியத்தோடு வாழப் பழகு.

**அஸ்னா பிஷ்ரி, தரம் – 10**
**பேருவளை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**Sister Rumman**




Assalamualaikum dear friends !

## I wish you all a very peaceful eid !

**"ThaqabbalAllahuminnahwaminkum"**

With all the celebrations out there, let's go for some language, too. Read the paragraph below.

"Nusra woke up early in the morning and had her festival shower, before the others. She wore her new shalwar with a blue top and green pijamas. She always helps her mother in kitchen, and that day, she scraped coconut for pittu. She greeted all her family members with dua and left to the mosque with her mother and sisters."

Now friends, imagine yourself to be Nusra and try to complete the paragraph, on how Nusra spent her festival day. Use past tense. Here are some useful words.

Pray, sermon, share, visit, sweets, decorate, fire crackers.....

..................................................................................................................................

..................................................................................................................................

..................................................................................................................................

Now let's take the sentence

"She always helps her mother"

Note the word ALWAYS. This word explains the verb HELPS, so it's an ADVERB. It says 'how often?' she helps, so it's an ADVERB OF FREQUANCY. Now look at the same sentence in which other ADVERBS OF FREQUANCY.

- She **often** helps her mother.
- She **sometimes** helps her mother.
- She **usually** helps her mother.
- She **never** helps her mother.
- She **rarely** helps her mother.

Use these adverbs in your paragraph.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Reading

"Reading maketh a full man". Reading is a good hobby. Many noble men in the world had been ardent readers, when they were children. Most of them are still such. There are many classes of books such as fiction, biography and poetry. They enrich different faculties of our brain. Every person wants to become a good reader. One should get rid of all misconceptions within him. Firstly we should try to be humble to obey the author and to open our minds as wide as possible. Unless a person does so, he will never be able to become a good reader. Most people try to dictate to the authors. They have started reading when the facts therein do not appeal their own logic that may either be right or wrong. These people are just preventing themselves from entering a heaven of the world which most of the human beings wish to reach.



**B.M.N.Fathima**
**Grade 09 A**
**Ku/Hizbullah C.C**
**Kurunegala**

## Some tips for



## healthy eating

1. Human beings require good food to grow reproduce and maintain good health.
2. Without food our body can not stay warm , build or repair tissues or maintain the heart beat
3. Eat sensibly, our body needs a certain number of calories each day.
4. Avoid eating foods that are high in simple carbohydrates like sugars and too much fat can also be harmful.
5. A balanced diet provides us with the main essential nutrients such as carbohydrates, proteins, fats , vitamins and water.

**FasraLizan, 11G**
**Beruwala**

## Threats to forests



Forests have been endangered in many ways. Continuous climatic changes have become a serious threat to forests causing severe damages. Increasing heat of the atmosphere has resulted in a scarcity of water in forest areas. This has made forests more vulnerable to insects, pests and diseases.

If we do not take effective measures to conserve forest areas, there will only be grass lands instead of forests.



**A.R.M.Razmi**
**M.Y.M.Rizmi**
**9B**
**B./Welimada Muslim MahaVidyalaya**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

# National Animals

| Country | Animal |
|---|---|
| China | Panda |
| India | Peacock |
| Australia | Kangaroo |
| Thailand | White elephant |
| Spain | Ass |
| England | Horse |
| Saudi Arabia | Camel |
| Japan | Koi fish |

















**FathimaFuard**
**K/Madina C.C**
**Madawala, Kandy**

# LOOK BEFORE YOU LEAP

The old and oft-repeated saying is `look before you leap` and `Think before you speak`.

The story of the dog and his unwise master is well known. He came home and finding stains of blood of the paws and the mouth of the dog, shot him dead. Later he came to know that the dog had fought with the wolf, and saved his son,who was hale and hearty. Nothing could be done later.

The world has been suffering time and again due to the many wars in which million of men and money have been lost. Even now piling of arms and ammunition is being done by some nation. We should learn lessons from Hiroshima and Nagasaki where the atom bombs has caused untold misery to humanity.

**RUKSHANA ROSHAN**
**A/L (Arts)**
**AL-GAZZALY C.C**
**ATULUGAMA.**

## ~True friendship quotes~

A true friend freely, advises justly, assists readily, adventures boldly, takes all patiently, defends courageously, and continues a friend unchangeably.



**M.A.M.Anas (11A),**
**M.C.M.Safiyu (10B)**
**Km/Al-Misbah Maha Vidyalaya Kalmunai**

I'm eagerly waiting for your contributions with comments, stories poems and essays. The best ones will be published insha Allah.

So write to me at

I learn every day

A 61/ 5 ,
Zahira Road, Mawanella

Or

Mail me to
aharamenglish@gmail.com

Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org




களின் செயற்பாடுகளை கௌரவித்து சிறந்ததொரு எதிர்காலத்தை வழங்குவதே இத்தினத்தின் முக்கிய நோக்கமாகும். 1991ல் ஒஸ்ரியாவின் Vienna வில் உள்ள சிலர் ஒன்று கூடி இத்தினம் கொண்டாடப்பட வேண்டும் என தீர்மானித்தனர். என்றாலும், 1998ல் லிஸ்டன் நகரில் நடைபெற்ற உலக நாடுகளின் இளைஞர் விவகாரங்களின் பொறுப்

எம்.எஸ். அலா அஹமட்

# சர்வதேச இளைஞர் தினம்

வருடா வருடம் ஆகஸ்ட் மாதம் 12ம் திகதி சர்வதேச இளைஞர் தினம் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் அனுசரனையுடன் சர்வதேச ரீதியாக அனுஷ்டிக்கப்படுகின்றது. இளைஞர்கள் என்போர் ஒவ்வொரு சமூகத்தினதும் நாட்டினதும் முதுகெலும்புகளாவர். சூரியன் வானில் உச்சம் கொடுக்கும் போது ஒளியும், உஷ்ணமும் எப்படிக் காணப்படுமோ அதேபோன்றே மனித வாழ்வில் இளமை என்பது உணர்வுகள் கொதிக்கும், சாதிக்க துடிக்கும், அர்ப்பணம் செய்ய விரையும் ஓர் துணிச்சல் மிக்க பருவமாகும். ஒவ்வொரு சமூகங்களினதும் நாட்டினதும் எழுச்சியும் வீழ்ச்சியும், அபிவிருத்தியும் மந்தமும் இளைஞர்கள் கைகளிலேயேதான் பெரிதும் தங்கியுள்ளது. இளமை கத்தி போன்றது. அதனைப் பயன்டுத்தி ஆக்க நடவடிக்கைகளிலும் ஈடுபடலாம்; அழிவு, நாசகார காரியங்களிலும் ஈடுபட முடியும்.

அந்த வகையில் இளைஞர்கள் மூலம் நாட்டிற்கும், சமூகத்திற்கும் சிறந்த பங்களிப்புக்களை வழங்குவதே இவ்விளைஞர் தினக் கொண்டாட்டத்தின் முக்கிய நோக்கமாகும். ஐக்கிய நாடுகள் தாபனத்தின் கணிப்பீட்டின் படி 15-24 வயதுக் குட்பட்டோரே இளைஞர்களாவர். சிலர் 29 வயதிற்குட்பட்டோரையும் இளைஞர் என்ற வட்டத்தினுள் உள்ளடக்குகின்றனர். இன்று உலகில் 1/6 நபர் இளைஞராக காணப்படுவதுடன் 120 கோடிக்கும் அதிகமான இளைஞர்கள் உள்ளனர். இது கிட்டத்தட்ட உலக சனத்தொகையில் 18% ஆகும். அதிகமான இளைஞர்கள் வளர்முக நாடுகளிளேயே உள்ளனர்.

இளைஞர்களின் உணர்வுகளை நெறிப்படுத்தி, வெற்றி மனப்பாங்குகளை ஏற்படுத்தி, இளைஞர் பான அமைச்சர் குழு சர்வதேச ரீதியாக இளைஞர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளையும் செயற்பாடுகளையும் கருத்திற் கொண்டு இளைஞர்களுக்கான சர்வதேச தினம் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என முடிவுசெய்தது. இதன்படி ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை 1999ல் ஆகஸ்ட் 12ஐ அதற்காகத் தீர்மானித்தது. இதற்கமைய 2000ம் ஆண்டு சர்வதேச இளைஞர் தினம் முதன் முதலாக சர்வதேச ரீதியாக UNO வின் அனுசரனையுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

அந்தவகையில் சர்வதேச இளைஞர் தினம் இளைஞர்கள் தொடர்பான முக்கிய 15 விடயங்களை உள்ளடக்கியுள்ளது. அவையாவன: கல்வி, தொழில், வறுமை, பசி, சூழல், போதைப் பொருள் அடிமையாதல், இளம் கடமை தவறுதல், ஓய்வு நேரச் செயற்பாடுகள், சுகாதாரம், பெண்கள் மற்றும் இளம் பெண்கள், HIV, தகவல் தொழிநுட்பம், ஆயுதமுரண்பாடு, தலைமுறை இடைவெளி, உலகமயமாக்கல் கலப்புத் தாக்கம், பூரணமான மற்றும் வினைத் திறனான சமூகப் பங்களிப்பு, தீர்மானம் எடுத்தல் என்பனவாகும்.

அதேபோன்று வருடாந்தம் இத்தினம் ஒரு கருப்பொருளை கொண்டு பல வித்தியாசமான நிகழ்வுகளுடன் கொண்டாடப்படுகின்றது. அந்த வகையில் இளைஞர் மாநாடுகள், விளையாட்டு நிகழ்வுகள், கண்காட்சிகள், இளைஞர் பாசறைகள், கலை கலாசார நிகழ்வுகள் போன்றன நாட்டின் அரசுகளாலும், அரசாங்க நிறுவனங்களாலும், அரச சார்பற்ற நிறுவனங்களாலும் மேற்கொள்ளப்படுகின்றது. 2013ம் ஆண்டு இத்தினம் "இளைஞர் இடம்பெயர்தல், முன்னேற்றம் அபிவிருத்தி" என்ற தலைப்பில் அமையப்பெற உள்ளமையும் முக்கிய அம்சமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# இளம் அணு விஞ்ஞானி
# டெய்லர் வில்ஸன்

இன்றுலகில் சாதிக்கத் துடிக்கும் இளம் சாதனையாளர்களுள் டெய்லர் வில்ஸனும் ஒருவர். அமெரிக்காவைச் சேர்ந்த அணுவியல் விஞ்ஞானியான இவர் 1994 மே 07ம் திகதி பிறந்தார். Kenneth Wilson மற்றும் Tiffany Wilson என்போரின் சாதனை மகனாவா.ர்.

2008இல் தனது 14வது வயதில் அணு உலையை கட்டிய இளம் சாதனையாளர்தான் வில்ஸன். அதன்பின் செறிவூட்டப்பட்ட யுரேனியம் கண்டறியும் மலிவான, மிக முக்கியமான ஒரு சாதனத்தையும் கண்டுபிடித்தார்.

2010ல் நடைபெற்ற சர்வதேச Intel அறிவியல் மற்றும் பொறியியல் கண்காட்சியில் தனது கண்டுபிடிப்பு மூலம் 1500 போட்டியாளர்களுடன் போட்டியிட்ட இவர், பல விருதுகளுக்கு சொந்தக்காரராக மாறினார். "அணுவினால் ஏற்படும் அணுப் பயங்கரவாதத்தின் பயத்திலிருந்தும் ஆபத்திலிருந்தும் விடுவிப்பதற்கான தொழில் நுட்பம்" பற்றியே இவரின் செயற்திட்டம் (Project) அமைந்திருந்தது. இன்டெல் இளம் விஞ்ஞானி என்ற விருதையும் சிறந்த பகுப்பாய்வு மற்றும் வானவியல் போன்ற துறைகளிலும் விருதுகளை இவர் சுவீகரித்துக் கொண்டார்.

இன்று அணுப்பிளவு உலையை கட்டுவதில் ஆர்வம் காட்டி வரும் வில்ஸன் இதன் கட்டுமானம் பற்றி 2012 TED மாநாட்டில் விளக்கியுள்ளார்.

நெவாடா பல்கலைக்கழகம் மற்றும் Davidsm Academy யில் கல்வி பயின்று வரும் வில்ஸனுக்கு 2012 இல் Thiel Followship என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

உதைப்பந்தாட்டம் மற்றும் கோல்ப் விளையாட்டில் ஆர்வமுடைய இவரிடம் இரண்டு ஆய்வு கூடங்களும் வீட்டில் ஒரு Leb உம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

"விஞ்ஞானம் செயற்படுத்துவதற்கு ஓர் இலகுவான விடயம். நடிகர்கள் அரசியல்வாதிகளை விட விஞ்ஞானிகள்தான் உலகை மாற்றவல்லவர்கள்" என வில்சன் தெரிவித்தார். இன்று இவரது ஆய்வு மூன்று முக்கிய தலைப்புகளில் அமைந்துள்ளது. அவை:

- அணுப் பயங்கரவாத எதிர்ப்பு
- அணு மருத்துவ ஆராய்ச்சி
- அணு கரு இணைவு என்பனவாகும்.

அதேபோன்று நியுட்ரான், புல்டோனியம் பற்றிய ஆய்வுகளிலும் ஈடுபட்டு வருவதுடன், உலக சக்திப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கும் கென்சர் நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்கும் பல ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவது முக்கிய அம்சமாகும். தனது ஆற்றலை சிறப்பாகப் பயன்படுத்த தம் பெற்றோரும், தனது நண்பர்களும் ஊக்குவிப்பு வழங்குவதாகக் கூறும் வில்ஸன், "நான் ஒரு சாடியினுள் நட்சத்திரத்தை வைக்க கனவு கண்டேன். அதனை செய்து முடித்தேன். நான் நினைக்கிறேன் என்னால் உலகை மாற்ற முடியும்" என்று என பெருமையுடன் ஒரு நேர்காணலில் கூறியுள்ளார்.

## இவரிடமிருந்து நாம் கற்கும் பாடங்கள்

- எதிர்காலம் பற்றிய சிறந்த கனவு, இலக்கு, ஒவ்வொரு மாணவனிடமும் காணப்படும் போது தான் அவனது எதிர்காலம் சிறப்பாக அமையும்.
- சமூகத்திற்கு நல்லது செய்ய வேண்டும் என்ற அர்ப்பண சிந்தை ஒவ்வொரு மாணவனுக்கும் அடிப்படையாக இருக்க வேண்டிய மிக அழகியதொரு பண்பாகும்.
- எப்போதும் எதையாவது சாதிக்க துடிக்கும் மனம், ஓர் மாணவனைச் சாதனையாளராக மாற்றும்.
- எந்தவொரு வெற்றிக்கும் தொடர் முயற்சி, பயிற்சி தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது

# வரலாறு



கலாநிதி கே.எம்.எம். இக்பால்

## 10ம் தரம்

பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. தொல்பொருள் மூலாதாரங்களை வகைப் படுத்தும் சரியான ஒழுங்கு.
   i. கல்வெட்டுக்கள், இலக்கியங்கள், சிதைவுகள்
   ii. சிதைவுகள், சிலைகள், கட்டடங்கள்
   iii. கல்வெட்டுக்கள், நாணயங்கள், சிதைவுகள்
   iv. நாட்டார் பாடல்கள், நாணயங்கள், கல் வெட்டுக்கள்

2. புராதன இலங்கையின் முக்கிய துறைமுகங் களைக் கொண்ட தொகுதி.
   i. கோகர்ண, கஜரகம, கல்யாணி
   ii. உருவெல, கோகர்ண, மாந்தை
   iii. மாந்தை, கஜரகம, கல்யாணி
   iv. கஜரகம, உருவெல, கோகர்ண

3. ஆரியர்களின் 4 வேதங்களுள் அடங்காதது எது?
   i. மகாபாரதம் ii. அதர்வணம்
   iii. சாமம் iv. யசுர்

4. வட இந்தியாவில் வளர்ச்சியடைந்த 16 குடி யேற்றங்களுள் கண அரசுகளாக விளங்கிய அரசுகள்.
   i. மகதம், கோசலம் ii. மகதம், மல்லா
   iii. மல்லா, கோசலம் iv. வஜ்ஜி, மல்லா

5. மௌரியப் பேரரசர்களை கால அடிப்படையில் சரியாகக் காட்டும் தொகுதி.
   i. அசோகன், பிந்துசாரன், சந்திரகுப்த மௌரியன்
   ii. அசோகன், சந்திரகுப்த மௌரியன், பிந்து சாரன்
   iii. சந்திரகுப்த மௌரியன், பிந்துசாரன், அசோகன்
   iv. சந்திரகுப்த மௌிரியன், அசோகன், பிந்து சாரன்

6. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரிய மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்படாத ஒரு இடம்.
   i. பாகியன்கல ii. பெல்லான்பதிபலஸ்ஸ
   iii. குருவிட்ட iv. மாத்தளை

7. கால அடிப்படையில் சரியாக அமைந்த மன் னர்களின் ஒழுங்கு முறை.
   i. வலகம்பா, வசபன், மகாசேனன்
   ii. வலகம்பா, மகாசேனன், வசபன்
   iii. மகாசேனன், வசபன், வலகம்பா
   iv. மகாசேனன், வலகம்பா, வசபன்

8. நிரல் 1க்கு ஏற்ப நிரல் 2ஐ ஒழுங்குபடுத்தினால் சரியாக அமையும் விடை.

| நிரல் 1 | நிரல் 2 |
|---|---|
| 1. தாதுசேனன் | A குருளு வாவி |
| 2. மகாசேனன் | B கலா வாவி |
| 3. இரண்டாம் அக்போ | C மகாவிலச்சிய குளம் |
| 4. வசபன் | D கந்தளாய்க் குளம் |

   i. ACBD ii. BADC
   iii. BACD iv. BCAD

9. டில்லி சுல்தானிய பேரரசு காலத்தில் ஆட்சி செய்த அரச வம்சங்களின் சரியான வைப்பு முறை
   i. கல்ஜி, அடிமை, துக்ளக், செய்யது, லோதி
   ii. கல்ஜி, அடிமை, செய்யது, துக்ளக், லோதி
   iii. அடிமை, கல்ஜி, துக்ளக், செய்யது, லோதி
   iv. அடிமை, கல்ஜி, செய்யது, லோதி, துக்ளக்

10. பாமினி இராச்சியத்தின் சிறந்த மன்னன்.
   i. பஹமன்ஷா ii. அலாவுதீன்
   iii. இஸ்மாயீல் iv. ஹரிஹரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

11. பாமியன் புத்தர் சிலையோடு தொடர்புபட்ட ஒரு நாடு.
i. பர்மா ii. சீயம்
iii. இந்தோனேசியா iv. ஆப்கானிஸ்தான்

12. சென்பீட்டர்ஸ் தேவாலயம் அமைந்துள்ள நாடு
i. பிரான்ஸ் (பரிஸ்)
ii. இத்தாலி (வத்திக்கான்)
iii. ஸ்பானியா (மட்ரிட்)
iv. கிரேக்கம் (ஏதன்ஸ்)

13. குருதிச் சுற்றோட்டத்தைக் கண்டுபிடித்தவர்.
i. நியூட்டன் ii. ஹார்வே
iii. கெப்லர் iv. பெரசல்ஸ்

14. ஆபிரிக்காவின் தென் முனைக்கு புயல்முனை எனப் பெயரிட்டவர்.
i. மகலன்
ii. பார்த்தலோமியஸ் டயஸ்
iii. வஸ்கொடகாமா
iv. கொலம்பஸ்

15. தேசிய அரசாக முதலில் உருவாகிய நாடு.
i. இத்தாலி ii. ஜேர்மனி
iii. ஸ்பானியா iv. கிரேக்கம்

## IIம் தரம்

1. முதலாளித்துவ அணியைச் சேர்ந்த 3 நாடுகளை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்க.
(கனடா, கிழக்கு ஜேர்மனி, இத்தாலி, போர்த்துக்கல், கியூபா) (3 புள்ளிகள்)

2. ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கங்கள் 4 தருக. (4 புள்ளிகள்)

3. சோவியத் ரஷ்யா வல்லரசாக மாற உதவிய காரணிகள் இரண்டை விளக்குக. (5 புள்ளிகள்)

4. பின்வருவன ஐக்கிய அமெரிக்கா வல்லரசாக வழிவகுத்த விதத்தை விளக்குக.
அ. மார்வில் திட்டம்
ஆ. நேட்டோ தாபனம்
இ. இரகசிய உளவுச் சேவை (CIA)

### விடைகள்

1. கனடா, இத்தாலி, போர்த்துக்கல்

2. i. சர்வதேச சமாதானத்தையும், அபிவிருத்தியையும் ஏற்படுத்தல்.
ii. நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்த்தல்.
iii. உலக பொருளாதார, சமூக, கலாசார பிரச்சினைகளைத் தீர்த்தல்.
iv. மனித உரிமைகள் மற்றும் அடிப்படைச் சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல்.
v. மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்காக ஒரு மத்திய நிலையமாகச் செயற்படுதல்.

3. **ரஷ்யப் புரட்சி**

ரஷ்யப் புரட்சியின் பின்பே ரஷ்யா ஒரு பலம் வாய்ந்த நாடாக எழுச்சியுற்றது. 1917 ஒக்டோபர் புரட்சியின் மூலம் சார் மன்னர்களின் சர்வதிகார ஆட்சியிலிருந்து, லெனின் ரஷ்யாவை விடுவித்தார். அவர் பிரபுக்களினதும் மதகுருமார்களினதும் அதிகாரங்களை இல்லாமலாக்கி, தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் உரிமைகளை வழங்கினார். தனியாருக்குச் சொந்தமாக இருந்த சொத்துக்களை அரச உடமையாக்கினார். அவற்றின் மூலம் கிடைத்த வருமானத்தை மக்களுக்கு வழங்கினார். நிர்வாக ரீதியில் மாற்றங்களை ஏற்படுத்தி ரஷ்யாவை ஒரு பலம்வாய்ந்த நாடாக மாற்றினார். 1921-1924 காலப் பகுதியில் பொருளாதார சீர்த்திருத்தத்தை ஏற்படுத்தினார். ரஷ்யா பெரும் வல்லரசாக மாற அங்கு நடைமுறைப்படுத்தப்பட்ட ஐந்து ஆண்டு காலத் திட்டங்கள் வழி வகுத்தன. லெனினுக்குப் பின்பு ரஷ்ய அதிபராகப் பதிவியேற்ற ஸ்டாலினின் ஐந்தாண்டு காலத் திட்டங்கள் மூலம் ரஷ்யாவை வல்லரசாக மாற்றினார். 1924 இல் பதவிக்கு வந்த அவர் தனது முதலாவது ஐந்து ஆண்டுகாலத் திட்டத்தை 1928இல் அறிமுகப்படுத்தினார். இத்திட்டத்தின்படி கைத்தொழிலை 136 வீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. 1933இல் மோட்டார் வண்டிக் கைத்தொழில் எதிர்பார்த்த இலக்கை அடைந்தது. நிலக்கரி, சீனி உற்பத்திகள் 3 ஆண்டுகளிலே எதிர்பார்த்த இலக்கை அடைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4. மார்வில் திட்டம்:

இரண்டாம் உலகப்போரில் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு ஐக்கிய அமெரிக்காவினால் வழங் கப்பட்ட உதவித் திட்டமே மார்வில் திட்டம் ஆகும். 1949இல் நடைமுறைப்படுத்தப்பட்ட இத் திட்டத்தை மார்ஷல் என்பவரது தலைமையிலான குழு தயாரித்தது. இதுவே உலகில் நடைமுறைப் படுத்தப்பட்ட முதலாவது அன்னிய உதவித் திட்டமாகும். இந்த உதவித் திட்டத்தின் மூலம் நோர்வே, டென்மார்க், ஒல்லாந்து, பெல்ஜியம், லக்சம்பேக் முதலிய நாடுகள் பயனடைந்தன. இந்த திட்டம் மூலம் ஐக்கிய அமெரிக்கா பல நாடுகளை தனது நேச நாடுகளாக ஆக்கிக் கொண் டது. சோவியத் ரஷ்யா தலைமையிலான பொது வுடைமை நாடுகள் இந்த உதவித் திட்டத்தை நிராகரித்தன.

### நேட்டோ அமைப்பு:

ஐக்கிய அமெரிக்கா தலைமையிலான பொது வுடமை நாடுகளின் பாதுகாப்பு ஒப்பந்தமே நேட் டோ ஆகும். "வடக்கு அத்திலாந்திக் நாடுகளின் பாதுகாப்பு ஒப்பந்தம்" நோட்டோ என்பதன் விரி வான பொருளாகும். கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், ஒல்லாந்து, ஸ்பானியா, இத்தாலி முதலிய நாடுகள் அங்கம் வகிக்கும் இந்த அமைப்பின் தலைமைப் பதவி ஐக்கிய அமெரிக்காவுக்குக் கிடைத்தது. இதனால் அதன் பலமும் செல்வாக்கும் அதிகரித்தன. "அங்கத்துவ நாடொன்றின் மீது எதிரி நாடொன்று தாக்குதல் நடத்துமாயின் அதனை அனைத்து அங்கத்துவ நாடுகள் மீதும் நடத்தப்பட்டதாகக் கருதி செயற்படுவோம்" என்று இதன் 5ம் வாசகம் கூறுகின்றது.

### இரகசிய உளவுச் சேவை:

சோவியத் ரஷ்யாவின் உளவுச் சேவையான கே.ஜீ.பி (KGB) முக்கியம் பெறுவதைப் போல, அமெரிக்காவின் உளவுச் சேவையாக சீ.ஐ.ஏ (CIA) முக்கியம் பெறுகின்றது. இதில் உயர் அதி காரிகள், பேராசிரியர்கள், சட்ட அறிஞர்கள் உட் பட 20,000க்கும் அதிகமானோர் பணியாற்று கின்றனர். முதலாளித்துவ அணியைப் பலப்படுத் துவதும், பொதுவுடமை அணியை பலவீனப் படுத்துவதுமே இதன் முக்கிய நோக்கங்களாகும். எதிரி நாடுகளின் ஆயுத உற்பத்தி பற்றியும், யுத்த ஒத்திகை பற்றியும், அரச தலைவர்களின் செயற் பாடுகள் பற்றியும் இது இரகசியமாகத் தகவல்க ளைப் பெற்று ஐக்கிய அமெரிக்காவுக்கு வழங்கு கிறது. சோவியத் ரஷ்யா வீழ்ச்சியடையவும் ஐக்கிய அமெரிக்கா தற்போது தனி வல்லரசாக வளர்ச்சி யடைந்ததற்கும் இதன் செயற்பாடுகளே முக்கிய காரணங்களாகும்.

---

(04ஆம் பக்கத் தொடர்...)

சிறுவர்களாகிய நாம் பெருநாள் தினத்தில் இஸ்லாம் விரும்பாத, பிழையான நடைமுறைக ளையும் பாவமான காரியங்கில் ஈடுபடுவதையும் தவிர்ந்து கொள்வதுடன் பெருநாளை சந்தோசமாகக் கொண்டாடுவதற்கு வசதியின்றி தவிக்கின்ற எம் மைப் போன்ற சிறார்களையும் எம்முடன் இணைத்து அவர்களையும் மகிழ்ச்சியாக பெருநாள் கொண் டாட வைப்பதற்கு முயற்சிப்போம்.

எமது பெருநாள் இஸ்லாம் எதிர்பார்கின்ற வண்ணம் அமைந்து அதன் மூலம் நன்மைகள் பல பெற்றவர்களாக மாற அல்லாஹ் எம் அனைவருக்கும் அருள் புரிவானாக!

(03ஆம் பக்கத் தொடர்...)

அள்ளிக்கொட்டும் மீன் பிடியில் ருசி கண்ட வர்கள் எங்கே அதை விட்டுத் தொலைத்தார்கள்! செய்கின்ற பாவத்தைப் பாவமென ஏற்க மறுத்தனர். தடுக்க வந்தவர்களை இழிந்துரைத்தனர், ஏளனம் செய்தனர். இஸ்லாத்தை தெளிவாக எடுத்துரைப் பவர்களுக்கு உலகில் வாழத் தெரியாதவர்கள் என்று இன்று சொல்வது போலத்தான் அன்றும் பாவத்தி லிருந்து தடுக்க முயற்சித்தவர்களுக்கும் சொல்லப் பட்டிருக்கும்.

(தொடரும்)

## சிந்தனைத் துளிகள்

- ✓ நீ புகழை வெறுத்தால் புகழ் உன்னைத் தேடிவரும்.
- ✓ அடிக்கடி கோபம் கொள்ளாதே! அது உன் அழி வுக்கு வழிவகுக்கம்.
- ✓ நம்பிக்கையை கைவிடாதே. அதுதான் வெற்றி யின் முதற்படி.
- ✓ உன்னைவிட அதிஷ்டம் குறைந்தவனிடம் இன்பத்தைப் பற்றிப் பேசாதே.
- ✓ வார்த்தைகளை விட, மௌனமே சிறந்தது.

உமாரா பின்தி முஸம்மில்
வடதெனிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வித்தியாசமாக சிந்தியுங்கள்
## (Think Different)

✍ ஜே.எம். அஸீம் ( நளீமி)
www.azeemzain.org

கிறிஸ்டோபர் ஐசக் ஸ்டோன், கல்லூரியில் படிக்கும் போது லிட்டில் பிரவுண்கோ என்ற ஒரு பிரபலமான பதிப்பகத்தில் பகுதி நேர வேலை செய்தார். என்ன வேலை? புத்தகம் அடுக்கும் ஸ்டொக் பையன் (Stock Boy). சாதாரண வேலை தான். கணினியில் ஆர்வம் கொண்ட ஸ்டோன் ஓய்வு நேரங்களில் கம்ப்யூட்டர் பழக ஆரம்பித்தார். அதில் ஓவியம் வரையவும் கற்றுக் கொண்டார்.

அப்போது 'லிட்டில் பிரவுண்கோ' வின் புத்த கங்கள் எல்லாவற்றுக்கும் அட்டைப்படங்கள் கைகளாலேயே வரையப்பட்டன. கம்ப்யூட்டர் பயன்படுத்துவதில்லை. ஸ்டோனுக்கு இது ஆச்சரி யம் அளித்தது. "கம்ப்யூட்டர்ல டிசைன் பண்ணினா நல்லா வருமே" என்று கேட்க நினைத்தார். ஆனால், ஸ்டொக் பையன் சொல்வதை யார் மதிப்பார்கள். சும்மா இருந்து விட்டார்.

புத்தகங்களுக்கு அட்டைப்படம் தயாரிக்கும் வேலை ஒருவருக்கு மாத்திரம் ஒப்படைக்கப்பட மாட்டாது. பலரின் வடிவமைப்புகளைப் பார்த்து அவற்றில் ஒன்றைத் தெரிவு செய்வார்கள்.

புதிய ஒரு புத்தகத்திற்கு அட்டைப்பட வடிவ மைப்புகள் கோரப்பட்டன. பல டிசைனர்கள் கையால் வடிவமைத்த தத்தமது டிசைன்களை சமர்ப்பித்திருந்தனர். இந்நேரத்தில் தனது கணினி ஐடியாவுக்கு செயல் வடிவம் கொடுக்க நினைத் தார் ஸ்டோன். தானும் கணினியால் ஓர் அட்டைப் படத்தை வடிவமைத்து சமர்ப்பிக்கப்பட்ட டிசைன் களுக்கு இடையே யாருக்கும் தெரியாமல் வைத்து விட்டார்.

தெரிவு ஆரம்பமானது. பல டிசைன்களையும் பார்த்த பின்னர், ஸ்டோனின் டிசைன் அனைவ ரையும் கவர்ந்தது.

"இதனை யார் வடிவமைத்தது?"

"நான்தான்" என்று ஸ்டோன் பதிலளித்தார்.

"அருமையாக உள்ளது. இதனையே தெரிவு செய்வோம்" என்றனர் மேலாளர்கள்.

உடனே அவருக்கு டிசைனர் உத்தியோகமும் கொடுத்து விட்டார்கள்.

அனைவரும் கையால் வரைவதைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்த போது கம்ப்யூட்டரில் வரைவது தொடர்பாக சிந்தித்து அதனை செயற் படுத்தி வடிவம் கொடுத்துக்காட்டினார். வித்தி யாசமாக சிந்தித்தது வெற்றி பெற்றது.

நீங்களும் இப்படி வித்தியாசமாக சிந்தித்தால் வெற்றி பெறலாம். சிலபோது வித்தியாசமான சிந் தனை எடுபடுமா என்ற தயக்கம் உங்களுக்கு ஏற்ப டக்கூடும். ஆனால், சாத்தியமான முறையில் முன்வைக்கின்ற போது வெற்றி பெறுகிறது.

வலைப்பதிவு எழுதும் பழக்கமுள்ள எவான் வில்லியம்ஸ் தான் எழுதுகின்ற விடயங்களை ஒரு பட்டனைக் கிளிக் செய்து இணையத்தில் பதி வேற்ற விரும்பினார். உடனே அவரும் அவருடைய குழுவினரும் காரியத்தில் இறங்கி Stuff எனும் சிறிய மென்பொருளைக் கண்டுபிடித்தார்கள். இந்த Stuff தான் பின்னர் Blogger ஆக மாறியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் பயன்படுத்துவதைப் போல் தானும் ஒரு பாவனையாளராக இருக்க எவான் விரும்ப வில்லை. வித்தியாசமாக சிந்தித்தார். தான் பயன் படுத்தும் வலைப்பதிவுகளை இலகுவாக்கும் முயற்சியில் இறங்கினார்.

நீங்கள் எப்போதும் பாவனையாளராக மாத் திரம் இருக்காமல் புதுமை படைப்பவராக இருந் தால் என்றும் வெற்றிதான். நாமும் இன்று எத்த னையோ நவீன கருவிகளையும் சாதனங்களையும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். சற்று வித்தியாசமாக சிந்தித்தால் நாமும் சாதனையாள ராகலாம்.

வித்தியாசமாக சிந்திப்பதற்கு வித்தியாசமாக, பெரிதாக ஒன்றும் தேவையில்லை. உங்கள் இயல்பு, விருப்பம், தேவை, ஆர்வம் என்பவற்றிற்கேற்ப சிந்திப்பதே வித்தியாசம்தான். ஏனெனில் ஒவ்வொரு மனிதரும் வித்தியாசமானவர்கள். ஒவ்வொருவரி னதும் தேவை, விருப்பு, வெறுப்பு, ஆசை, ஆர்வம் என்பவை வித்தியாசமாகவே இருக்கும். உங்களது வித்தியாசமான தேவை புதிய ஒரு கண்டுபிடிப் புக்கு வழிவகுக்கும். உங்கள் புத்தாக்க சிந்தனைக்கு ஏற்ப அது வித்தியாசமானதாக மிளிரும்.

நிக் டி அலோசியோ இங்கிலாந்தில் கற்றுக் கொண்டிருந்த மாணவர். எதையும் தேடிக் கற்கும் ஆர்வம் கொண்ட நிக்கிற்கு தான் இணையதளத்தில் கற்பவற்றை சுருக்கமாகத் தொகுத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது. இப்படியான வித்தியாசமான தேவை, ஆர்வம் உங்களுக்கும் எழலாம்.

நான் பலருடன் கலந்துரையாடிய போது பலரும் தமக்கும் அப்படியான தேவை இருப்பதாகக் கூறி னர். ஆனால், இதற்கு அவர்கள் தேடும் தீர்வு கொப் பியும் கையுமாக புறப்பட்டுவிடுவது. கேட்டால் சுருக்கக் குறிப்பு (Short notes) எடுக்கிறேன் என்பர்.

நிக் அப்படிச் செய்ய வில்லை. வித்தியாசமாக சிந்தித்தான். தான் இணை யத்தில் கற்பதை எப்படி சுருக்கமாக்கிக் கொள்வது. தனக்குத் தெரிந்த தொழி நுட்ப அறிவை வைத்து முயன்றார். இறுதியில் 'சம்லி' எனும் மொபைல் அப்ளிகேஷனைக் கண்டுபிடித் தார்.

வித்தியாசமாக சிந்திப்பது என்பது இதுதான். வேறொன்றுமில்லை. பலருக்கு பலபோது பலவித மான, வித்தியாசமான சிந்தனைகள் தோன்றும். ஆனால், அதனை சொல்வதற்குத் தயக்கம், இது சரிவருமா என்ற நம்பிக்கையீனம், எதிர்மறையான சிந்தனை எமது வித்தியாசமான சிந்தனைகளை குப்பையில் போட்டு விடுகின்றன. எனவே, தயங் காமல் கூறுங்கள். நம்பிக்கையோடு வாழுங்கள். உங்கள் நிந்தனை சிச்சயம் வெற்றி பெறும்.

எவ்வளவு காலத்துக்குத்தான் வலைப்பதிவுகளை வாசித்துக் கொண்டிருப்பது. யாராவது வாசித்து அவற்றை ஒலி வடிவமாக்கித் தந்தால் எவ்வளவு இலேசாகக் கேட்கலாம் என்று நீங்கள் சிந்தித்த துண்டா? நீங்கள் சிந்திப்பதற்கு பல வருடங்களுக்கு முன்னர் பலர் சிந்தித்ததன் விளைவுதான் இன்று Audiobook, Podcast என்பன.

நீங்கள் எப்போதும் பாவனையாளராக மாத்திரம் இருக்காமல் புதுமை படைப்பவராக இருந்தால் என்றும் வெற்றிதான். நாமும் இன்று எத்தனையோ நவீன கருவிகளையும் சாதனங்களையும் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். சற்று வித்தியாசமாக சிந்தித்தால் நாமும் சாதனையாளராகலாம்.

இப்படி வித்தியாசமாகச் சிந்திக்கத் தெரிந்தால் நீங்களும் புத்தாக்க சாதனைகள் புரியலாம். Think Different என்ற கோஷத்தோடு எழுந்த அப்பிள் நிறுவனம்தான் உலகிற்கு புதிய தொழிநுட்பத்துடன், வித்தியாசமான வசதிகளுடன் ஐபோன், ஐபேட், ஐபொட், ஐமெக் (கணினி), மெக் புக் (லெப் டொப்), ஐ டியுன் என பல வித்தியாசமான புதிய சாதனங்களை வழங்கியது.

இப்போது உங்கள் தாய், தந்தையர், வெளியூரி லுள்ள மாமா, மாமி, உறவினர்கள், நண்பர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று உங்க ளுக்குத் தெரியுமா? அவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உங்களுக்கு இருக்கிறதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படியென்றால் என்ன செய்வீர்கள்?

அனைவருக்கும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். எப்போதும் அவர்கள் எங்கே, என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் தொலைபேசி பில் ஏறிவிடும். என்ன செய்யலாம்? இப்படி சிந்தித்த ஒருவரின் வித்தியாசமான முயற்சிதான் நினைத்த மாதிரி செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் உலகிற்கு வித்தியாசமான புதுமையான சமூக ஊடக வலய மைப்பையே வழங்கியது.

தன்னோடிருக்கும் அனைவரும் என்ன செய்கி றார்கள் என்பதை அறிய ஆர்வம் கொண்ட ஒருவர் தான் நாம் கட்டுரையின் ஆரம்பத்தில் அறிமுகப் படுத்திய கிறிஸ்டோபர் ஐசக் ஸ்டோன். நட்பு வட்டத்துடன் செய்திகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வத்தில் ஆரம்பித்தது ஸ்டோ னின் பயணம். Live Journal என்ற இணையதளத்தில் இப்படி செய்யலாம் என்பதை அறிந்து அந்த இணையதளத்தில் பார்த்தார். தான் நினைத்த மாதிரி இல்லை. அதில் நான் இன்ன வேலை செய்தேன் என்று எல்லாமே இறந்த காலத்தில் இருந்தது. ஸ்டோனுக்குத் தேவை நிகழ்காலத்தில் நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பது.

சிறிது காலத்தின் பின்னர் AOL எனப்படும் மற் றொரு மென்பொருள் அறிமுகமானது. இது ஓரளவு எதிர்பார்த்த மாதிரி இருந்தது. ஆனால், அனைத் தும் கம்ப்யூட்டரின் முன் இருக்கும் வரைதான். எனவே, ஸ்டோனின் மனம் திருப்தியடைய வில்லை.

அப்போது RIM எனும் நிறுவனம் அறிமுகப்ப டுத்திய மொபைல் போனில் ஈமெயில் படிக்கலாம், எழுதலாம். உடனே யோசனை பட்டது ஸ்டோ னுக்கு, நாம் இதன் வழியாக ஈமெயில் அனுப்பி னால் அனைவருக்கும் தெரிந்துவிடும். இதுவும் ஸ்டோனுக்கு திருப்தியளிக்கவில்லை.

அப்போது அமெரிக்காவில் SMS அறிமுகமாகி யிருந்த காலம். ஸ்டோனின் அலுவலகத் தோழி அவருக்கு SMS அனுப்பினாள். ஆனால், பெரிதாக அறிமுகமில்லாததால் அதனை ஸ்டோனால் புரிந்து கொள்ள முடியவில்லை. மறுநாள் அதனை அனுப்பியவரிடம் கேட்டார். அவர் அதனை விளக்கியதும் ஸ்டோனுக்கு ஐடியா பளிச்சிட்டது. நமது கனவை SMS மூலம் நனவாக்கினால்....!!! தனது திட்டத்தை விளக்கினார். அவரது நிறுவன மேலாளர் ஏற்றுக் கொண்டார். உருவாகியது டுவிட்டர் (Twitter).

வித்தியாசமான சிந்தனைகளின் வடிவம் இப்படித்தான். நினைத்ததை நினைத்த மாதிரி அடையும் வரை தளராத பயணம். நீங்களும் வித்தியாசமான சிந்தனைகளை உங்களுக்குள் பதுக்கி வைத்துக் கொண்டிருக்காதீர்கள். மெல்ல மெல்ல, தெளிவாக மற்றவர்களுக்குக் கூறுங்கள். அவர்கள் புரிந்து கொள்ள காலம் எடுக்கலாம். பலர் புரிந்து கொள்ளாமல் கேலி செய்யலாம். இத்தகைய கேலிக்கு டுவிட்டரும் ஆளானது.

வித்தியாசமான சிந்தனை உங்களிடம்தான் இருக்கிறது. வித்தியாசமான பார்வை, வித்தியாச மான சிந்தனைக்கு வழிகோலும். உலகில் கண்டு பிடிப்புகளின் ஆரம்ப வடிவங்கள் இப்படி அழகாக அமைந்திருக்கவில்லை. அவற்றை பலரும் வித்தி யாசமாக நோக்கியதன் விளைவுதான் இன்று கண் கவரும் தொழிநுட்பங்கள்.

மௌவ்ஸ் (Mouse) தொடங்கி தொடுதிரை (Touch Screen) தொழிநுட்பம் வரை எல்லாமே வித்தியாசமான சிந்தனையின் வடிவங்கள்தான். தண்ணீர் என்றால் மொபைல் போனுக்கு ஆகாது என்ற நிலை மாறி தண்ணீரிலும் பயன்படுத்தக் கூடிய மொபைல் போனை சொனி நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

நாடு கடந்து வெளிநாடு சென்று கற்கும் நிலை மாறி அனைத்தும் இணையவழி கற்கை நெறிகளாக வடிவம் பெற்று வருகின்றன. இணையத்தின் ஊடாகவே வகுப்பறையில் இருந்து கற்பது போன்று கற்று கற்கைநெறியைப் பூர்த்தி செய்யும் வசதி களை வழங்குகின்றன.

வித்தியாசமான சிந்தனைதான் ஜப்பானில் நீருக்கு மேலும் தாவரங்களை வளர்க்கச் செய்கிறது. பாலைவனங்களில் பசுமையான மரங்களை செழிக்கச் செய்கிறது. மழை நீரை வீணாக்காது பயன்படுத்தச் செய்கிறது. குப்பை, கழிவுகளை மீள் சுழற்சிக்கு உட்படுத்துகிறது.

வித்தியாசமாக சிந்தியுங்கள். வித்தியாசமாக சிந்திக்க மூளைக்கு பயிற்சி கொடுங்கள். புதுமை படைப்புகளிலுள்ள வித்தியாசமான சிந்தனையைப் புரிந்து கொள்ளுங்கள். நீங்களும் வித்தியாசமாக புதுமை படைக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20வது ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டிகள்




இப்போட்டிகள் இந்தியாவின் புனே நகரில் 2013 ஜுலையில் நடைபெற்றன.

இதில் இலங்கை குழாமில் 8 வீரர்களும், 12 வீராங்கணைகளும் பங்கேற்றனர்.

ஈட்டி எறிதல் போட்டியில் ஆடவருக்கான பிரிவில் சஜித் மதுரங்கவும், மகளிர் பிரிவில் நதிகா லக்மாலியும் வெள்ளிப் பதக்கத்தை வென்றதுடன் ஆடவருக்கான 4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டப் போட்டியில் இலங்கை அணி வெண்கலப் பதக்கத்தை பெற்று மூன்று பதக்கங்களுடன் பதக்க பட்டியலில் 14ம் இடத்தை அடைந்தது.

இப்போட்டிகளில் சீனா 27 பதக்கங்களுடன் முதலிடத்தை பெற்றிருந்தது.

## உலகின் பிரமாண்ட கட்டடம்



உலகில் மிக பிரமாண்டமான கட்டடம் 2013 ஜூனில் திறக்கப்பட்டது.

தென்மேற்கு சீனாவில் சிசுவான் மாகாணத்தின் தலைநகரான செங்குவில் அமைக்கப்பட்ட நியூ கென்சூரி குலோபல் சென்றர் என்ற கட்டடமே உலகில் தூண்களின்றி நிற்கும் பிரமாண்டமான கட்டடமாகும்.

1.7 மில்லியன் சதுர மீற்றர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இக்கட்டடம் 500 மீற்றர் நீளமும், 400 மீற்றர் அகலமும், 100 மீற்றர் உயரமும் உடையதாகும்.

செயற்கை சூரியன் அமைக்கப்பட்டுள்ள இக்கட்டடம் மனிதனால் தயாரிக்கப்பட்ட கடல்சார்ந்த நகரம் என வர்ணிக்கப்பட்டுள்ளது.








**திரு. பீ. உமா சங்கர்,**
B.Com (jaf), M.com (Kelaniya) (R) Spl.Trd.com,
NDBF, Sri Lanka Technical College - Colombo



## எட்வேர்ட் ஸ்னோடன்

2013 ஜுலையில் அமெரிக்காவின் உளவு நடவடிக்கையை அம்பலப்படுத்திய குற்றச்சாட்டிற்கு உட்படுத்தப்பட்டவர்.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவனம் இரகசிய முறையில் தகவல்களை சேகிரிப்பதற்கு பயன்படுத்தும் அணுகுமுறைகளில் தனக்கு உடன்பாடில்லை என்பதால்தான் அவை தொடர்பான இரகசியங்களை அம்பலப்படுத்த தீர்மானித்ததாக குறிப்பிட்டார்.

## உலகின் அதி சக்தி வாய்ந்த பிரபலம்

2013ம் ஆண்டிற்கான உலகின் மிகவும் சக்தி வாய்ந்த பிரபலமாக அமெரிக்க தொலைக்காட்சி சேவை உரிமையாளரும். அறிவிப்பாளரும் நடிகையுமான ஒபராவின்பிரே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவர் போமப்ர்ஸ் சஞ்சிகையின் 100 பிரபலங்கள் வரிசையில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Location Code - இடக்குறி



இலங்கையின் சகல கிராம பெயர்களும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழி களிலும் கணினியில் உள் வாங்கப்பட்டுள்ளதுடன், ஒவ் வொரு கிராமத்திற்கும் ஒரு பிரத்தியேக எண் வழங்கப்பட் டுள்ளது. இதுவே 'Location Code' - இடக்குறி' என அழைக் கப்படுகிறது.

இலங்கையில் ஒரே பெயரில் பல கிராமங்கள் அழைக்கப்படுவதால் ஏற்படும் சிக்கல்களை தவிர்ப்பதற்காகவே இம்முறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

இதன் இணைய விலாசம்

www.life.gov.lk//locationcode/ navigate

# அரபு உலகின் வயது குறைந்த தலைவர்



*2013 ஜூனில் கத்தார் மன் னர் ஷெய்க் ஹமாத் பின் கலிபா அல்தானி தனது மகனை புதிய மன்னராக முடிசூட்டுவதற்காக அரியாசனத்தை துறந்தார்.*

இதன் பிரகாரம் இவரது இரண்டாவது மகன் ஷெய்க் தமீம் பின் ஹமாத் அல்தானி புதிய மன்ன ராக முடிசூடவுள்ளார்.

*30 வயதான இவர் அரபு உலகின் வயது குறைந்த தலைவர் எனும் பெருமையை பெற்றுள்ளார்.*

# மௌஸ் (சுட்டி) கண்டுபிடிப்பாளர்



கணினிக்கான மௌஸ் கண்டுபிடிப்பாளரான அமெரிக்க தொழில்நுட்ப வல்லுநர் டக்லஸ் கார்ல் எங்கெல்பார்ட் 2013 ஜூனில் காலமானார்.

Video confrencing எனப்படும் காணொளித் தொடர்பாடலையும் கண்டுபிடித்தவர் இவரே.

# ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் சம்பியன்கள்



1998 - தென்னாபிரிக்கா

2000 - நியூஸிலாந்து

2002 - இலங்கை - இந்தியா

2004 - மேற்கிந்திய தீவுகள்

2006 - அவுஸ்திரேலியா

2009 - அவுஸ்திரேலியா

2013 - இந்தியா

# ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய அங்கத்துவ நாடு



2013 ஜுலையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய 28வது அங்கத்துவ நாடாக குரேஷியா இணைந்து கொண்டது.

குரேஷியா 1991-1995 யுத்தத்தின் பின்னர் யூகோஸ்லாவியாவில் இருந்து பிரிந்து தனி நாடாக சுதந்திரம் பெற்றது.

யூகோஸ்லாவிய குடியரசில் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்தில் இணையும் இரண்டாவது நாடு இது ஆகும்.

# இலங்கையின் தேசிய மலர்

இலங்கையின் தேசிய மலராக நீலத் தாமரை மலர் Nil manel blue water Lily விளங்குகின்றது.

பல ஆண்டு கால ஆராய்ச்சிகளின் பின்பு 1986ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கையின் தேசிய மலராக இது தெரிவு செய்யப்பட்டது.

இது நீல நிறமும் ஊதா நிறமும் கலந்து உருவாகும் இதழ் களும் பொன் நிறத்திற்கு சமமான மஞ்சள் நிற நடுப்பகுதியும் கொண்ட மலராகும்.

நீலத் தாமரை மலர் பரிசுத்தத்திற்கும், சத்தியத்திற்குமான கௌரவத்தின் உதாரணமாக விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியும் இலக்கியமும்

**10, 11 ஆம் தர மாணவர்களுக்கானது**

ஆசிரியர்: நஸ்ரா நிசாம்தீன் BA (Hons) PGDE

**பகுதி iii** — **கவிதைகள்**

01. அ) 'நிழலின் நினைவு' எனும் கவிதையில் கவிஞர் கூற முற்படும் விடயம் யாது? விளக்குக.

ஆ) 'வேம்பு' பற்றிய கவிஞரது வர்ணனையில் காணத்தகு சிறப்பம்சங்கள் யாவை?

இ) பின்வரும் வரிகளை விளக்குக.

i. "நித்தியமாய் நினைத்திருந்த நிலை குலைய

அயலிருந்தோர் - புயல்வரவு... மரஞ்சரிவு...!"

ii. "இன்று காலுயரம் நிற்கின்ற கன்று களில் ஒன்றேனும் வேம்பின் நிழல் மறந்த மண் முழுதும் நிழல் இறைக் கும்"

## நிழலின் நினைவு

படலையைத் தாண்ட்
நிமிர்ந்து விஸ்வரூபமாய்
வழி மறிக்கும்
முற்றத்து வேம்பு
செம்பொன் துளிர்முதிரப்
பசுமை கனக்கும்
இளவேனிற் கிளைகளின்
மறைவில் விரிந்து
உதிரும் நுண்மலர்கள்

நண்பகலின்
வெய்யிலை அஞ்சி
மரத்தடியில் ஒதுங்கும்
பெரு நிழல் மேல்
குளிர் தேடி ஊரும்
இளங்காற்று
வேனிலுடன் முதிர்ந்து
கனிந்த பழங்களின்
மனிதர் உணரா
இனிமை இரகசியத்தை
பரிமாறும் காக்கைகள்

அணிலைத் துரத்தி
மரமேறி விழும் பூனை
உதிரும் பொன் இலைகள்
பட்டை வெடிப்பில்
பிசின் கசிவு
முகரும் எறும்புகளின்
ஊர்வலம்
மேலும் கீழுமாய்
ஓயாது பகல் முழுதும்
மரத்தடியில் நீட்டி நிமிர்ந்து
நிழல் காயும்
நேரத்தும் மனதிற்கு இனிதென்றோ
அடைவதற்கு அரிதன்றோ
கருத தெரியாது
நித்தியமாய் நினைத்திருந்த
நிலைகுலைய அயலிருந்தோர்
புயல்வரவு – மரஞ்சரிவு

இன்று காலுயரம் நிற்கின்ற
கன்றுகளின் ஒன்றேனும் வேம்பின்
நிழல் மறந்த மண் முழுதும்
நாளை நிழல் இறைக்கும்
என்மேல் இல்லாவிடின்
என் பிள்ளைகள் மேல்
நிச்சயமாய்
என் பேரர்கள் மேல்

### விடைகள்

01.

அ) கவிஞர் சிவசேகரம் நிழலின் நினைவு எனும் கவிதையினூடாக உலகில் எதுவும் நிலையானது அல்ல எனும் உண்மையை உணர்த்துவதுடன், மாற்றங்கள் ஏற்படும் போது பழையன மறையும் புதியன தோன்றும். திடீரென்று தோன்றுகின்ற புயல் வேப்பமரத்தை சரித்தது போல திடீரெனத் தோன்றும் புரட்சியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழையனவற்றை அழித்துப் புதியனவற்றைத் தோற்றுவிக்கும் என்கிறார்.

இதனை உணர்த்த வேம்பின் நிழல், வேப்ப மரம் நாடிவரும் உயிரினங்கள் அவை பெறும் பயன்கள், திடீரென வரும் புயல், மரஞ்சரிதல் போன்ற நிகழ்வுகளை எடுத்தாள்கிறார். அத்துடன் சமுதாய மாற்றம் இன்றோ என்றோ, தோன்றுமென்பதை உறுதிப்பட புலப்படுத்து கிறார்.

ஆ) வேப்பமரத்தோற்றம், கிளைகளின் காட்சி, நாடிவரும் பறவைகளெனப் புலவர் வேப்ப மரம் தொடர்பான இக்கவிதையூடாக கூறவரும் விடயத்தை புலப்படுத்தும் போது கையாண்டுள்ள வர்ணனைகள் தனிச்சிறப்பு வாய்ந்தவைகள்.

"படலையைத் தாண்ட நிமிர்ந்து விஸ்பரூப மாய் வழிமறிக்கும் முற்றத்து வேம்பு" எனும் வரிகளில் வேப்ப மரத்தின் பரந்த, விரிந்த தோற்றத்தை வர்ணிக்கிறார். 'செம்பொன் துளிர் முதிரப்பசுமை...' எனும் வரிகளினூடாக வேப்பம் பூக்களின் மலர்ச்சி, அழகு ஆகிய தன்மைகளை நனிசொட்டாக விளக்குகிறார்.

'கனிந்த பழங்களின் மனிதர் உணரா...' என்று தொடரும் வரிகள் மனிதனுணராத பயன்களை பறவைகள் உணர்ந்தமை பற்றி ஆழமான கருத்தை முன்வைக்கிறார். அணிலைத் துரத்தி மரமேறி வழுக்கி விழும் பூனையையும் வேம்பின் பட்டை வெடிப்பில் வடியும் பிசின் கசிவினை முகர்ந்திட ஊர்வலமாகச் செல்லும் எறும்புகளையும் வர்ணிக்குமாற்று சிறப்புக் குரியது.

புயலானது திடீரென வேப்பமரத்தை சாய்க்கும் நிலையை வாசகருக்கு உள்ளத்து அதிர்வை ஏற்படுத்தும் வகையில் வர்ணிப்பதும் அதனூடே சிந்தனையைத் தூண்டுவதும் கவிஞரது கற்பனைக்கும் வர்ணனை ஆளுமைக்கும் எடுத்துக் காட்டாகும்.

(05ஆம் பக்கத் தொடர்...)

அர்ப்பணமாகட்டும். எனக்கு வாய்ப்பு தவறிவிட்டது. எனது இனத்தைச் சேர்ந்த உனக்காவது நபியவர்களைப் பாதுகாக்கும் வாய்ப்புக் கிடைத்தது மிக்க மகிழ்ச்சி என்று கூறிக்கொண்டேன். அதற்குள் அபூ உபைதா இப்னு ஜர்ராஹ் பறவையைப் போல் விரைந்து அவ்விடம் வந்தார். நாம் இரு வரும் நபியவர்களை நோக்கி விரைந்தோம். நாம் அங்கு சென்றடையும் போது தல்ஹா (ரழியல்லாஹு அன்ஹு) அவர்கள் நபியவர்களுக்கு முன் மயங்கி விழுகிறார்.

அப்போது நபியவர்கள், "உங்கள் சகோதரரைக் காப்பாற்றுங்கள். அவர் தனக்கு சொர்க்கத்தை சொந்தமாக்கிக் கொண்டார்'' என்று கூறினார் கள்.

இவ்வாறு நபியவர்கள் தனது குழுவினரை ஆரம்பம் முதல் இறுதிவரை பாராட்டியும் புகழ்ந்தும் உற்சாகப்படுத்திக் கொண்டே இருந்தார்கள். இத்தகைய பாராட்டும் உற்சாகமும் அவர்களை உற்சாகத்தோடு போராடச் செய்தது.

(25ஆம் பக்கத் தொடர்...)

## உலக மக்கள் தொகை தினம்

மக்கள் தொகை குறித்த விழிப்புணர்வை உலகளாவிய ரீதியில் மக்களுக்கு எடுத்துச் செல்லும் ஒரு முயற்சியாக ஐக்கிய நாடுகள் வளர்ச்சி திட்டத்தினால் கொண்டாடப்பட்டு வருகின்றது.

தற்போது 6,831,200,000 மக்கள் உள்ளதாகவும் 2050ம் ஆண்டில் 8 முதல் 10.5 பில்லியன் வரை எட்டும் எனவும் குடித்தொகை மதிப்பீட்டு பணியகம் தெரிவித் துள்ளது.

மக்கள் தொகை வளர்ச்சி வீதமானது வருடாந்தம் 1.31 வீதத்தால் அதிகரிப்பதுடன், ஒவ்வொரு செக்கனுக்கும் 2.582 வீதமாகவும், ஒரு நாளைக்கு 223,098 தொகையாகவும், ஒரு வருடத்திற்கு 81430910 தொகையாகவும் அதிகரிக்கின்றது.

குடித்தொகை அதிகரிப்பை எதிர்கொள்ளும் நாடுகளாக இந்தியா, சீனா, நைஜீரியா, பாக்கிஸ்தான், கொங்கோ, எதியோப்பியா, பங்களாதேஷ் ஆகியன ஐ.நா. அறிக்கையில் இனங்காணப்பட்டுள்ளன.

2013ம் ஆண்டிற்கான இத்தின கருப் பொருளானது Focusing on Adolescent pregnancy என்பதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹனீபா ஏ.வஹாப் (இஸ்லாஹி)



# பாடங்களை மீட்டும் போது ஏற்படும் களைப்பு மற்றும் மிகையான தூக்கத்திலிருந்து விடுபடுவதற்கான சிறந்த வழி என்ன?

அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

நான் படிப்பதற்கு ஆசைப்படும் ஒரு மாணவன். இருப்பினும் பாடங்களை மீட்டுவதற்காக உட்கார்ந்தால் சோம்பல், களைப்பு போன்றவற்றை உணர்கிறேன். மேலும், கடுமையான தூக்கம் என்னை வாட்டி எடுக்கிறது. குறிப்பாக, மனனம் செய்ய வேண்டிய பாடங்களாக இருந்தால் தூக்கத்தின் மீதான விருப்பம் அதிகமாக வருகிறது. எவ்வளவு விழிப்புணர்வுடன் இருந்தாலும், சுய ஊக்குவிப்புக்களைச் செய்தாலும் எவ்வித தாக்கத்தையும் என்னில் காண முடியாதுள்ளேன்.

1. இதிலிருந்து விடுபடுவதற்கு ஏதாவது வழிமுறைகள் உண்டா?
2. விழித்திருந்து படிப்பதற்கு எனக்கு உதவி செய்யக்கூடிய மருந்துகள் உண்டா?

---

**மதிப்புக்குரிய சகோதரரே!**

வஅலைக்குமுஸ்ஸலாம் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு

உண்மையில் இவ்வாறான பிரச்சினை இன்றுள்ள மாணவர்களுக்கு மத்தியில் குறிப்பிட்டளவு காணப்படுகின்றது. விழித்திருக்க வேண்டும் என்பதற்காக எவ்வித மருந்து மாத்திரைகளையும் பயன்படுத்த வேண்டாம். அவ்வாறு இன்று சந்தையில் காணப்படக்கூடிய மாத்திரைகள் பொருத்தமானதன்று. மருத்துவ ரீதியான தேவை இருந்தாலே அன்றி நீங்கள் கூறிய பிரச்சினைக்கு மருந்து மாத்திரைகள் ஏதும் இல்லை என்பதை விளங்கிக் கொள்ளுங்கள்.

உதாரணமாக தைரொய்ட் சுரப்புப் பற்றாக்குறையைக் கூறலாம். இப்பிரச்சினை ஒரு மாணவனிடத்தில் காணப்படுமாயின் அது சோம்பல், சிந்தனையை ஒருமுகப்படுத்துவதில் பலவீனம் போன்றவற்றுக்கு இட்டுச் செல்லும். இது போன்ற சந்தர்ப்பங்களில் தைரொட்சின் மருந்து மிக அவசியமாகும். அது இழந்த ஹோர்மோன்களைப் பதிலீடு செய்வதுடன் சக்தியையும் அதிகரிக்கச் செய்கிறது.

சகோதரரே! தாங்கள் கூறிய விடயங்களை வைத்து நோக்கும்போது உங்களது நிலை பின்வரும் விடயங்களை வேண்டி நிற்கிறது எனலாம்.

1. உங்களுடைய ஈமோகுளோபின் வீதம் சரியாக உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளும் வகையில் மிக எளியதொரு மருத்துவப் பரிசோதனையை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறேன். சோர்வு நிலைக்கு பெரும்பாலும் இரத்தத்தில் உள்ள ஈமோகுளோபின் குறைபாடே காரணமாகக் காணப்படுகிறது. அவ்வாறு உங்களுக்கு பிரச்சினை உள்ளது எனத் தெளிவானால் அதற்கான சிகிச்சையைப் பெற்றுக்கொள்வது அவசியமாகும். உண்மையில் இதற்கான சிகிச்சை மிக எளிமையானது என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.
2. கற்றல் மற்றும் ஞாபக மீட்டல் என்பவற்றின் முக்கியத்துவத்தைப் பற்றிய உணர்வை உள்ளத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். இன்றிலிருந்து இன்னும் நான்கு அல்லது ஐந்து வருடங்களின் பின்னர் நீங்கள் எந்த இடத்திலிருப்பீர்கள், உங்களது நிலை என்னவாக இருக்கும், உங்களுடைய தகுதி மற்றும் சமூக அந்தஸ்த்து என்னவாக இருக்கும் போன்ற விடயங்களையும் உள்ளத்தில் அடிக்கடி ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். இவ்வாறான சிந்தனைகள் உடல் மற்றும் உள ரீதியாக ஒருவரை சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ள உதவுகிறது.

**போதுமானளவு ஓய்வெடுப்பதும் காலையில் இவ்வாறு படிப்பதும் ஒவ்வொரு நாளும் சுறுசுறுப்பாகவும் உற்சாகமாகவும் இருக்க உங்களுக்கு உதவி செய்யும்.**

3. போதுமானளவு ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். இது முக்கியமான அம்சமாகும். அதிகளவு பாடங்களை மீட்டுவதற்கு இது ஒருபோதும் தடையாக அமையமாட்டாது. சரியான முறையில் நேர காலத்துடன் தூங்கச் செல்லுங்கள். நேரகாலத்துடன் நித்திரையிலிருந்து விழித்து பஜ்ருத் தொழுகையை அதற்குரிய நேரத்தில் தொழுது கொள்ளுங்கள். பின்னர் பாடசாலைக்குச் செல்ல முன்னர் உள்ள சுமார் ஒன்றரை அல்லது இரண்டு மணித்தியாலங்களுக்கு பாடத்தை மீட்டுங்கள். இந்த இரண்டு மணித்தியாலங்கள் ஏனைய நேரத்தில் 5 மணித்தியாலங்கள் படிப்பதைவிடச் சிறந்தது என்று குறிப்பிடலாம்.

போதுமானளவு ஓய்வெடுப்பதும் காலையில் இவ்வாறு படிப்பதும் ஒவ்வொரு நாளும் சுறுசுறுப்பாகவும் உற்சாகமாகவும் இருக்க உங்களுக்கு உதவி செய்யும். இது ஆச்சரியப்படக்கூடிய விடயம் என்பதை விட பலரின் அனுபவங்களிலிருந்து விளங்க முடியுமான உண்மையாகும்.

நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் இந்த சமூகம் காலையில் பரகத் வழங்கப்பட்ட சமூகம் என்பதை எங்களுக்குக் கற்றுத் தந்துள்ளார்கள்.

4. மேலும் சொற்பமேனும் விளையாட்டில் ஈடுபடுவதும் அவசியமாகும். இது உடல் மற்றும் உள்ளத்துக்கு மிகப் பிரயோசனமானதாகும்.

5. நேரத்தை ஒழுங்கு செய்வதற்கான ஒரு திட்டத்தை வரைந்து கொள்ளுங்கள். நீண்ட நேரத்துக்கு ஒரே பாடத்தை மாத்திரம் படிக்காதீர்கள். அவ்வாறு படிப்பது சோம்பல் மற்றும் களைப்புக்குக் காரணமாக அமைகிறது. வாரத்துக்கு மூன்று தடவையேனும் நண்பர்களுடன் குழுவாகச் சேர்ந்து படியுங்கள். இவ்வாறு படிக்கும்போது தேயிலை மற்றும் கோபி போன்றவற்றைப் பரிமாறிக் கொள்பவதில் பிரச்சினை இல்லை.

---

(32ஆம் பக்கம் பார்க்க...)

b. ஒருவர் எழுமாறாக தெரிவுசெய்யப்பட்டால்

i. அவர் Hotel Q இல் உணவு உண்பவராக (1 புள்ளி)

ii. Hotel A இல் Short Eats உண்பவராக இருப்பதற்கான நிகழ்தகவுகளை காண்க. (2 புள்ளிகள்)

10. உருவில் $AB = AC$ ஆகவும் $A\hat{B}E + A\hat{C}D = 90^0$ ஆகவும் இருப்பின்

i. $ABC$ எவ்வகையான முக்கோணி (1 புள்ளி)




ii. $\Delta ABC = \Delta A\hat{C}D$ எனவும் (4 புள்ளிகள்)

iii. $CE = BD$ எனவும் (2 புள்ளிகள்)

iv. $\Delta BCE = \Delta BCD$ எனவும் நிறுவுங்கள். (3 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சென்ற இதழ் தொடர்...

04. தபாலகம் ஒன்றிற்கு குறித்த தினத்தில் சமுகமளித்தவர்களில் 40 பேர் முத்திரை வாங்கினர். உருவை அவதானித்து,




i. தந்தியடித்தோர் 8 பேர் எனின், முத்திரை வாங்கித் தந்தியடித்தோர் எத்தனை பேர்? (2 புள்ளிகள்)

ii. காசுக் கட்டளையினை அனுப்பியோர் 18 பேர் எனின், முத்திரை வாங்கிக் காசுக் கட்டளை அனுப்பியோர் எத்தனை பேர்? (2 புள்ளிகள்)

iii. முத்திரை மட்டும் வாங்கியோர் எத்தனை பேர்? (2 புள்ளிகள்)

iv. நிழற்றப்பட்ட பிரதேசத்தை விபரிக்க. (2 புள்ளிகள்)

v. ஒருவர் எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்டால் அவர் இம் மூன்றில் எதனையுமே செய்யாதவராக இருப்பதற்கான நிகழ்தகவு யாது? (2 புள்ளிகள்)

05. கணிப்பீடு ஒன்றில் மாணவர்கள் பெற்ற புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| புள்ளிகள் | 0-10 | 10-20 | 20-30 | 30-40 | 40-50 |
|---|---|---|---|---|---|
| மீடிறன் | 5 | 8 | 12 | 7 | 4 |
| மாணவர்கள் குழு | A | B | C | D | E |

a. i. அதிகமான மாணவர்கள் எந்தக் குழுவில் காணப்படுகின்றனர்? (1 புள்ளி)

ii. பரீட்சையில் தோற்றிய மொத்த மாணவர்கள் எத்தனை பேர்? (2 புள்ளிகள்)

iii. 10-30 இடைப்பட்ட புள்ளிகளைப் பெற்றோர் முழுவதன் என்ன பின்னம்? (1 புள்ளி)

b. i. இம்மாணவர்களின் எண்ணிக்கையை பை வரைபில் காட்டும்போது குழு $A$ இனை வகைக்குறிக்கும் ஆரைச் சிறையின் பருமன் எத்தனை பாகை. (2 புள்ளிகள்)

ii. மேலுள்ள தரவுகளை பை வரைபில் குறித்துக் காட்டுக? (4 புள்ளிகள்)



## பகுதி A

**பகுதி A யிலிருந்து ஐந்து வினாக்களையும் B யிலிருந்து ஐந்து வினாக்களையும் தெரிந்து எடுத்து 10 வினாக்களுக்கு விடை தருக. ஒவ்வொரு வினாவின் சரியான விடைக்கும் 10 புள்ளிகள் வழங்கப்படும்.**

01.

| |
|---|
| ரூ. 10 பங்குகளை ரூ. 15படி கொள்வனவு செய்யத் தக்கவர்களுக்கு வருட பங்கிலாபம் 12% ஆகும். Company R |
| ரூ. 10 பங்குகளை ரூ. 8 படி கொள்வனவு செய்யத்தக் கவர்களுக்கு அதிகூடிய இலாபம் வழங்கப்படும். Company H |

i. கம்பனி $R$ ல் ரூ. 7500ஐ முதலீடு செய்த அமலா, கொள்வனவு செய்யும் பங்குகளின் எண்ணிக்கை யாது? (2 புள்ளிகள்)

ii. அவர் கம்பனி $R$ ல் அடையும் வருட வருமானம் யாது? (2 புள்ளிகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

iii. கம்பனி $H$ இல் ரூபா 4800ஐ முதலீடு செய்த விமலாவிற்கு வருட வருமானமாக ரூ. 600 கிடைத்தால் கம்பனியானது வழங்கிய வருட பங்கிலாபச் சதவீதத்தைக் காண்க.
*(4 புள்ளிகள்)*

iv. எக்கம்பனியில் முதலீடு செய்வது அனுகூல மானது காரணத்துடன் விளக்குக.
*(2 புள்ளிகள்)*

**02.** சார்பு $y=(x-1)(x-5)$ இன் $x$ மாறும் விதத் திற்கேற்ப $y$ மாறும் விதம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

| x | -1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| y | 12 | 5 | 0 | -3 | -4 | .... | 0 | 5 | 12 |

a. i. $x=4$ ஆகும் போது $y$ இன் பெறுமானத்தைக் காண்க. *(1 புள்ளி)*

ii. பொருத்தமான அளவிடைக்கு வரைபுத் தாளில் வரைபை வரைக. *(2 புள்ளிகள்)*

b. உமது வரைபிலிருந்து

i. சார்பின் இழிவுப் பெறுமானம் யாது?
*(1 புள்ளி)*

ii. திரும்பற் புள்ளியினைத் தருக. *(1 புள்ளி)*

iii. சார்பு மறையாகவும் குறைந்து செல்லும் $x$ இன் பெறுமான வீச்சினை எழுதுக.
*(2 புள்ளிகள்)*

iv. $x^2-4x-1=0$ என் இருபடிச் சமன் பாட்டின் மூலகங்களைக் காண்க.
*(2 புள்ளிகள்)*

**03.** i. தீர்க்க $\dfrac{2}{(x+3)}-3\quad\dfrac{2}{(x+3)}=\dfrac{1}{6}$
*(3 புள்ளிகள்)*

ii. காரணி காண்க $x2+2ax-px-2ap$
*(2 புள்ளிகள்)*

iii. a. தரப்பட்ட செவ்வகத்தின் பரப்பளவை $x$ இல் மூவுறுப்பியாகத் தருக.
*(2 புள்ளிகள்)*




b. இதன் பரப்பளவு $156cm^2$ எனின் செவ்வகத்தின் நீள அகலங்களைக் காண்க. *(3 புள்ளிகள்)*

**04.**

i. சுருக்குக. $\left(\dfrac{16x^2}{25y^4}\right)^{-1/2}$ *(3 புள்ளிகள்)*

ii. சுருக்குக. $\log 3^{81}-\log^{24}+3\log_a a$
*(3 புள்ளிகள்)*

iii. $2a-2x=16$
$3a+4x=-11$ எனும் ஒருங்கமை சமன் பாடுகளை தீர்ப்பதன் மூலம் $a, x$ இன் பெறுமானங்களைக் காண்க.
*(4 புள்ளிகள்)*

**05.** தொழிற்சாலை ஒன்றில் உள்ள ஊழியர்கள் தினந்தோறும் கடமை நேரத்தில் $TV$ பார்ப்பதில் செலவிடும் நேரம் பற்றிய தகவல் கீழே அட்டவனையில் தரப்பட்டுள்ளது.

| நேர ஆயிடை (நிமிடம்) | $x$ | மீடிறன் ($f$) | $fx$ |
|---|---|---|---|
| 16-20 | | 3 | |
| 20-24 | 22 | | 154 |
| 24-28 | | 11 | |
| 28-32 | | 16 | |
| 32-26 | 34 | | 340 |
| 36-40 | | 8 | |
| 40-44 | | 5 | |
| | | $\Sigma f=$ ....... | $\Sigma fx=$ ....... |

i. $f$ நிரலினை பூரணப்படுத்தி தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் காண்க.
*(1 புள்ளி)*

ii. 1 தொழிலாளி செலவு செய்த இடை நேரத்தினை கிட்டிய நிமிடத்தில் தருக.
*(5 புள்ளிகள்)*

iii. 1 மணித்தியாலம் தொழிலாளர்கள் $TV$ பார்ப்பதனால் ரூ. 420 நட்டம் ஏற்படுகிறது என நிறுவன முகாமையாளர் தெரிவித்தார் எனின் 1 நாளைக்கு ஏற்படும் நட்டத்தொகையைக் காண்க.
*(2 புள்ளிகள்)*

iv. ஒவ்வொரு தொழிலாளரும் 1 மணி நேரம் மேலதிகமாக வேலை செய்வதினால் ஒருவர் மூலம் ரூ. 500 நிறுவனத்திற்கு இலாபம் ஏற்படின் $TV$ பார்ப்பதன் மூலம் ஒரு நாளில் ஏற்பட்ட நட்டத்தை தவிர்ந்து மேலதிகமாக நிறுவனம் அடையும் தேறிய இலாபம் எவ்வுளவு? *(2 புள்ளிகள்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பகுதி B

06. 

> தரையில் படரும் ஒரு வகைத்தாவரமானது 1வது மாதத்தல் 5$m^2$ பரப்பளவிலும் 2வது மாதத்தில் 11$m^2$ பரப்பளவிலும் 3வது மாதத்தில் 17$m^2$ பரப்பிலும் 4வது மாதத்தில் 23$m^2$ என்ற ஒழுங்கிலும் வளர்ந்து சென்றன.

> நீரில் மிதக்கும் சல்வீனியா தாவரமானது 1வது மாதத்தில் 13 $m^2$பரப்பளவு 2வது மாதத்தல் 18 $m^2$பரப்பளவு 3வது மாதத்தில் 23 $m^2$பரப்பளவு என்ற ஒழுங்கில் படர்ந்து செல்கின்றன.

i. தரையில் வளரும் தாவரம் முதல் 6 மாதங்களிலும் வளர்ந்த அளவினை தொடராக தருக. (4 புள்ளிகள்)

ii. $n$ வது மாதத்தில் நீரில் மிதக்கும் தாவரம் வளரும் பரப்பளவை $n$ இல் தருக.

iii. 1வருட இறுதியில் தரையில் வளரும் தாவரம் எவ்வளவு பரப்பளவில் பரவி இருக்கும்.

iv. இரு தாவரங்களும் ஒரே காலப்பகுதியில் நடப்பட்டிருந்தால் எத்தனை மாதங்களில் இரு தாவரங்களும் ஒரே பரப்பளவில் படர்ந்து காணப்படும்.

07. $cm / mm$ அளவுடைய நேர்விளிம்பு, கவராயம் என்பவற்றை மாத்திரம் பயன்படுத்தி,

i. $AB = 3cm,\ A\hat{B}C = 120^0,\ BC = 5cm$ ஆக வுள்ள $\Delta ABC$ யை அமைக்க.

ii. $AB$ யை $X$ வரை நீட்டுக.

iii. $A\hat{C}B = B\hat{C}D$ ஆகுமாறு கோணம் $BCD$ யை அமைக்க இங்கு $D$ ஆனது நீட்டப்பட்ட $BX$ ல் உள்ளது.

iv. $CA$ இற்கு சமாந்தரமாக $D$ இனூடாக கோடு ஒன்றை அமைக்க. அது நீட்டப்பட்ட $CB$ யை $E$ இல் சந்திக்கிறது.

v. $\Delta DCE$ இற்கு சமமான பரப்பளவுள்ள முக்கோணி ஒன்றை பெயரிடுக.

08. உருவில் $3a$ பக்க நீளமுள்ள சதுர அடியையும் $2h$ உயரமுடைய திண்மக் கூம்பகத்தின் கீழ் அதே அடிப்பரப்பும் $h$ உயரமுடைய கனவுரு ஒன்று பொருத்தப்பட்டு உருவாக்கப்பட்ட நினைவுச் சின்னத்தின் மாதிரி வடிவம் தரப் பட்டுள்ளது.




i. இக் கூட்டுருவின் உயரம் யாது? (2 புள்ளிகள்)

ii. கூம்பகத்தின் கனவளவை $a, h$ ல் தருக. (2 புள்ளிகள்)

iii. கனவுருவின் கவனவளவைக் காண்க. (3 புள்ளிகள்)

iv. கூம்பகத்தின் கனவளவிற்கும் கனவுருவின் கனவளவிற்கும் இடையிலான விகிதத்தைக் காண்க. (2 புள்ளிகள்)

09. விடுமுறைகால சுற்றுலா மேற்கொண்ட குறித்த நிறுவனத்தின் ஊழியர்களின் 145 பேரும் மாலை நேர உணவினை இரு Hotel களில் ஏதாவது ஒன்றை உண்டவை பற்றி தகவல்கள் தரப்பட்டுள்ளன.

| | Cake | Short Eats |
|---|---|---|
| Hotel A | 40 | ........... |
| Hotel Q | ........ | 15 |




a. i. Hotel Aஇல் உண்டவர்களில் 2/5பங்கினர் Cake உண்டனர் எனின் இடைவெளிகளை நிரப்புக. (2 புள்ளிகள்)

ii. நிழற்றப்பட்ட பிரதேசத்தை விளக்குக. (2 புள்ளிகள்)

iii. தரவுகளை வெண்ணுருவில் குறிக்க. (3 புள்ளிகள்)

(29ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10, 11 தர மாணவர்களுக்கு
# விஞ்ஞானம்



தரம் 10 | பௌதிகவியல் | ஆசிரியர்: எம்.எம்.எஸ். பிரேம் நவாப்

## விசையும் நேர் கோட்டியக்கமும்

*01.* தூரம், இடப்பெயர்ச்சி, கதி, வேகம், ஆர்முடுகல் என்பவற்றின் வரைவிலக்கணங்களை எழுதுக.

**தூரம்:** ஒரு பொருள் பயணிக்கும் பாதையின் நீள அளவு தூரம் ஆகும்.

**இடப்பெயர்ச்சி:** ஒரு பொருளின் ஆரம்ப இறுதி நிலைகளுக்கிடையிலான நேர்கோட்டுத் தூரம்.

**கதி:** தூர மாற்ற வீதம் கதி எனப்படும்.

**வேகம்:** இடப்பெயர்ச்சி மாற்ற வீதம் வேகம் எனப்படும்.

**ஆர்முடுகல்:** வேக மாற்ற வீதம் ஆர்முடுகல் எனப்படும்.

*02.* பொருளொன்றின் இடப்பெயர்ச்சி நேரத்துடன் மாறுபடுவதை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.




i. முதல் 30 செக்கனில் பொருளின் வேகம் யாது?

ii. 30 முதல் 50 செக்கன் வரை பொருளின் இயக்கம் எவ்வாறானது?

iii. இப்பொருளின் இயக்கத்திற்கான வேக நேர வரைபை வரைக.

*விடைகள்*

i. வேகம் $= \dfrac{\text{இடப்பெயர்ச்சி}}{\text{நேரம்}}$

$= \dfrac{45}{30} = 1.5\ ms^{-1}$

ii. பொருள் ஓய்வில் உள்ளது அல்லது இயங்கவில்லை.

iii. வேகம் ($ms^{-1}$)




### இயக்க சமன்பாடுகள்

| | |
|---|---|
| 1ம் இயக்க சமன்பாடு | $V = u + at$ |
| 2ம் இயக்க சமன்பாடு | $S = ut + \frac{1}{2}at^2$ |
| 3ம் இயக்க சமன்பாடு | $V^2 = u^2 + 2as$ |
| 4ம் இயக்க சமன்பாடு | $S = \frac{(u+v)}{2}t$ |

*03.* வானில் நிறுத்தப்பட்ட ஓர் உலங்கு வானூர்தியிலிருந்து (Helicopter) தனியாக கீழ் நோக்கிப் பாய்ந்த சாகச வீரர் ஒருவரின் வீழ்காவலி 10 செக்கனின் பின் விரிகின்றது. (புவியீர்ப்பு ஆர்முடுகல் $g = 10ms^{-2}$ எனக் கருதுக)

i. வீழ்காவலி விரியும் தருணத்தில் சாகச வீரரின் வேகம் யாது?

ii. வீழ்காவலி விரிந்த பின்னர் அக்கணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் $5ms^{-2}$ அமர்முடுகலுடன் அச்சாகச வீரர் கீழ் நோக்கி வீழ்ந்து பூச்சிய வேகத்தில் தரையை அடைந்தார் எனின்,

a. சாகச வீரர் நிலத்தை அடைய எடுத்த மொத்த நேரம் யாது?

b. வீழ்காவலி விரியும்போது சாகச வீரர் நிலத்திலிருந்து எவ்வளவு உயரத்தில் இருந்தார் என்பதைக் காண்க.

*விடைகள்*

i. $V = u + at$

$V = 0 + 10 \times 10$

$V = 100ms^{-1}$

ii. a. வீழ்காவலி வரிந்த பின்னர்

$V = u + at$

$0 = 100 + (-5) \times t$

$0 = 100 - 5t$

$5t = 100$

$t = 20s$

∴ மொத்த நேரம் = $10 + 20 = 30s$

b. $S = \frac{(v+u)}{2} t$

$S = \frac{(0+100)}{2} \times 20$

$S = 50 \times 20$

$= 1000m$

## நியுட்டனின் இயக்க விதிகள்

*1ம் இயக்க விதி:*

சமனற்ற புற விசை தாக்காதவிடத்து எந்தவொரு பொருளும் ஓய்வில் இருக்கும். இன்றேல் சீரான வேகத்தில் நேர் கோட்டில் இயங்கிக் கொண்டிருக்கும்.

04. a. உந்தமாற்ற வீதம் பிரயோகிக்கும் விசைக்கு நேர்விகித சமனாகும் என்பதுடன் தொடர்புபட்ட நியுற்றனின் இயக்க விதியை எழுதுக.

b. 50kg திணிவின் மீது $1.8\ ms^{-2}$ எனும் ஆர்முடுகலை ஏற்படுத்தத் தேவையான விசையின் அளவைக் காண்க.

c. 1N என்பதனை வரைவிலக்கணப்படுத்துக.

d. கையினால் சுவரின் மீது பலமாக அடிக்கும் போது கைக்கு நோ ஏற்படுகிறது. இதனுடன் தொடர்புபட்ட நியுற்றனின் விதியை பெயரிடுக, அவ்விதியை எழுதுக.

## உராய்வு விசை (F)

- இரு மேற்பரப்புகள் ஒன்றுடனொன்று தொடுகையிலிருக்கும் போது அவற்றிற்கிடையே சார்பியக்கம் அல்லது அதற்கான முனைப்பு ஏற்படுமாயின் அதனைத் தவிர்ப்பதற்காக தொடுகை மேற்பரப்பினால் ஏற்படுத்தப்படும் மறுதாக்கம் உராய்வு விசை ஆகும்.
- பொருள் வழுக்கிச் செல்லும் அதாவது இயக்கம் ஆரம்பிக்கும் கணத்தில் மிக உயர்ந்தளவு உராய்வு விசை தொழிற்படும். இது எல்லை உராய்வு எனப்படும்.

05. a. எல்லை உராய்வு விசையில் ஆதிக்கஞ் செலுத்தும் காரணிகள் எவை?

b. உராய்வு விசையினால் ஏற்படும் பிரதிகூலங்கள் 2 தருக.

c. மழைக் காலங்களில் செல்லும் வாகனங்களின் தடுப்பைப் பிரயோகித்தாலும் வாகனத்தை உடனடியாக நிறுத்த முடிவதில்லை. இதற்கான காரணம் யாது?

d. பொறிகளில் அசையும் பகுதிகள் வழுக்கிச் செல்வதை இலகுபடுத்தும் உத்திகள் மூன்றைக் குறிப்பிடுக.

*விடைகள்*

a. மேற்பரப்பின் செவ்வண் மறுதாக்கம், தொடுகை மேற்பரபப்பின் தன்மை.

b. சக்தி வீண்விரயமாகும், பொறிகளின் பகுதிகள் தேய்வடையும், வெப்பம் பிறப்பிக்கப்படும்.

c. மழைக் காலங்களில் வீதியில் உராய்வு குறைவடைதல்.

d. மசகுப் பொருள் இடல், குண்டுப் போதிகை இடல், உருளைப் போதிகை இடல்.

## விசைத் திருப்பம், விசைகளின் சமனிலை

- பொருளொன்றின் சுழற்சி விளைவை விளக்குவதற்காகப் பயன்படும் கணியம் விசைத் திருப்பம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

- பொருளொன்றின் திரும்பற் புள்ளியிலிருந்து இயன்றளவு கூடிய தூரத்தில் விசையைப் பிரயோகிப்பதால் குறைந்த விசையுடன் பொருளைச் சுழற்ற முடியும்.

விசைத் திருப்பம் = விசை x சுழலிடத்திற்கும் விசையின் தாக்கக் கோட்டிற்கும் இடையிலான செங்குத்துத் தூரம்.

*06.* a. பின்வரும் உருவில் கோல் சமநிலையில் இருப்பின் தூரம் x இன் பருமனைக் காண்க.




b. வாகன டயர்களைக் கழற்றும் போது சாவியினுள் இரும்புக் குழாயொன்றை இட்டு அதனைக் கொண்டு ஆணிகளை இலகுவாகக் கழற்றுவர். இதற்கான காரணம் யாது?

## தரம் 11 இயைபாக்கம், ஒருசீர்த்திட நிலை

- உடற் தொகுதிகளுக்கிடையே இடைத் தொடர்புகள் எற்படுத்தப்பட்டு அவற்றின் தொழிற்பாடுகள் கட்டுப்படுத்தப்படல் இயைபாக்கம் எனப்படும். இது 2 வகைப்படும்.

  1. நரம்பியைபாக்கம் - நரம்புக் கணத்தாக்கம் மூலம் நடைபெறுவது.
  2. நரம்பின்றிய இயைபாக்கம் - ஓமோன்கள் மூலம் நடைபெறுவது.

*01.* எமது உடலில் தூண்டலை உணரும் வாங்கிகள் ஐந்து காணப்படினும் தூண்டற் பேறைக் காட்டுவன இரு வகை அங்கங்களேயாகும். அவை எவை?

*1.* தசைகள் *2.* சுரப்பிகள்

*02.* நரம்புத் தொகுதியில் காணப்படும் நரம்புக் கலங்களின் வகைகளையும் அவற்றின் தொழிற்பாடுகளையும் எழுதுக.

1. உணர் நரம்புக் கலம் : புலனங்கங்களிலிருந்து மைய நரம்புத் தொகுதியை நோக்கி கணத்தாக்கத்தைக் கடத்துதல்.
2. இயக்க நரம்புக் கலம்: மைய நரம்புத் தொகுதியிலிருந்து விளைவு காட்டிகளுக்கு கணாத்தாக்கத்தைக் கடத்துதல்.
3. இடைத்தூது நரம்புக் கலம் : உணர் நரம்புக் கலத்திற்கும் இயக்க நரம்புக் கலத்திற்குமிடையே கணத்தாக்கத்தைக் கடத்துதல்.

*03.* மனித மூளையின் நெடுக்கு வெட்டு முகத் தோற்றத்தை கீழ் வரும் உரு காட்டுகிறது.




i. A, B, C ஆகிய பகுதிகளைப் பெயரிடுக.

ii. A, B, C எனும் பகுதிகளினால் மேற்கொள்ளப்படும் தொழிற்பாடுகளை எழுதுக.

i. A - மூளையம், B - மூளி,
C - நீள்வளய மைய விழையம்

**A இன் தொழில்:**

*1.* இச்சை வழிச் செயற்பாடுகளை ஆளுதல்.
*2.* புலனுணர்வுகளை இனங்கண்டறிதல்.
*3.* கற்றல், ஞாபகம், நுண்ணறிவு, சிந்தனை போன்ற உயர் மட்ட தொழிற்பாடுகளை மேற்கொள்ளல்.

**B இன் தொழில்:**

*1.* வன்கூட்டுத் தசைகளை ஒருமித்து செயற்படச் செய்தல்.
*2.* உடற் சமநிலையைப் பேணுதல்.

**C இன் தொழில்:**

*1.* இதயத்துடிப்பு, சுவாசம், வாந்தி போன்ற இச்சையின்றிய செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல்.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் செயல்களுக்கு நீங்களே பொறுப்பு



தமிழில்: அலா அஹமட்

அழகியதொரு ஆற்றின் அருகே அப்துல்லாஹ்வின் பெரிய தோட்டம் அமைந்திருந்தது. அதில் அவர் பழம் தரும் பல மரங்களை நாட்டி அவற்றை சிறந்த முறையில் பராமரித்து வந்தார். ஒரு நாள் இவற்றிலுள்ள பழங்களை பறித்து விற்பதற்காக தனது தோட்டத்திற்கு வந்தார். பழங்களை பறித்துக் கொண்டிருக்கும் போது ஒரு மரக் கொப்பில் ஓர் அன்னிய மனிதர் பழங்களை உண்டு கொண்டிருப்பதை கண்டார். இவருக்கு கோபம் மேலிட்டது.

"ஏய்...! நீ யார்? இங்கு என்ன செய்கிறாய்? நீ எனது பழங்களை திருடிக் கொண்டிருக்கிறாயா?" என்று கேட்டார்.

அம்மனிதனோ சற்று அவரை பார்த்து விட்டு காதில் எதையும் வாங்காதவர் போல் மீண்டும் பழங்களை பறிக்கலானார். தோட்டக்காரருக்கு கோபம் கடுமையாகியது. கண்கள் சிவந்து விட்டன.

"நான் இந்த மரங்களை ஒரு வருட காலமாக கவனித்து வருகிறேன். உனக்கு இதில் எந்த உரிமையும் இல்லை. உடனே இறங்கு" என்று கூறினார்.

அம்மனிதன் மரத்தில் இருந்துகொண்டே.

"நான் ஏன் இறங்க வேண்டும்? இது இறைவனது தோட்டம். நான் இறைவனின் அடியான். எனவே, எனக்கு இந்த பழங்களை பறிக்க உரிமை உள்ளது" என்றார்.

இதைக் கேட்ட அப்துல்லாஹ்வுக்கு அதிர்ச்சி மேலிட்டது. எனவே, அவரது மகன் வசீமை அழைத்து மரத்தில் ஏறி அவனை கயிற்றால் கட்டுமாறு வேண்டினார்.

தோட்டக்காரர் ஒரு தடியை எடுத்து அந்த மனிதரை அடிக்கலானார். அந்த மனிதர்,

"ஏன் என்னை அடிக்கிறீர்கள்? இவ்வாறு அடிப்பதற்கு எந்த உரிமையும் உங்களுக்கு இல்லை. நீ அடிக்கும் மோசமான மனிதர்" என்றார்.

இதற்கு அப்துல்லாஹ்,

"நான் ஏன் பயப்பட வேண்டும்? இந்த தோட்டம் என்னுடையது. நானும் இறைவனது அடியான். எனவே ஏன் எனக்கு பயம்"

என்றார், அந்தமனிதர் தயங்கித் தயங்கி.

"பொறுங்கள் என்னை அடிக்க வேண்டாம். என்னை மன்னித்து விடுங்கள். இது உங்கள் தோட்டம்தான். நான் அனுமதியுடனே வந்திருக்க வேண்டும். என்னை மன்னியுங்கள்" என்றார்.

தோட்டக்காரர் புன்முறுவலுடன்,

"இப்போதுதான் உன் தவறை நீ ஏற்றுக் கொண்டாய். நான் உன்னை மன்னித்து விட்டேன். ஆனால் நீ ஞாபகம் வைத்துக்கொள் இறைவன் அனைவருக்கும் மூளையை தந்துள்ளான். ஒவ்வொரு செயலும் அவர்களது கையிலே உள்ளது." என்று கூறினார்.

பின் தோட்டக்காரர் சில பழங்களை அன்பளிப்பாக வழங்கி அவரை அனுப்பி வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சிக்கிய வலை



ஒரு நாள் சந்தித்தாய்
மறுநொடியில் சிந்தித்தாய்
அது ஷைத்தானின்
சிக்கிய வலை

பெண்களும், ஆண்களும்
சிக்கித் தவிக்கும்
ஒரு வலையினை தோற்றுத்தாய்

நவீன உலகத்தில்
தொடர்பாடல் மூலம்
தொடர்புகளை ஏற்படுத்தி
கலாசாரத்தை சீரழிக்க வைத்தாயோ?

ரப்பே! வேண்டாம்
இந்த சிக்கிய வலை

**அஸ்ஹா அமான், தரம் 11**
**அல் கஸ்ஸாலி ம.க.**
**அடுலுகம பண்டாரகம**

## பேசும் தாய்



**ஈரைந்து மாதங்கள் கருவறையில் சுமந்து**
**பத்தியங்கள் பல காத்து**
**துன்பங்களை இன்பமாக்கி**
**உனக்காக வாழ்பவள் தாய்**

**இந்த உலகிற்கு உன்னை**
**உதிக்க வைத்த வானமவள்**
**களங்கமில்லா அன்பு கொண்டு**
**கண்ணும் கருத்துமாய் வளர்ப்பவள்**
**பேசும்**
**நேசிக்கும் இதயமும் தாய்...**

**ஏ.எப். பர்ஹானா**
**பொ/ அல் றிபாய் ம.வி.**
**தம்பாளை**

## மறுமை



உலகில் எல்லாம் அழிந்து விடும்
படைத்த இறைவனைத் தவிர

உலகமே அழிவில் வீழ்ந்துவிடும்
அல்லாஹ்வின் அர்ஷைத் தவிர

உலக இன்பதுன்பமெல்லாம் மறைந்து விடும்
சுவன இன்பத்தையும் நகர துன்பத்தையும் தவிர
உலக மக்களெலாம் மரணித்துயிர் பெறுவர்
அல்லாஹ்வைத் தவிர

உலகில் சேமித்ததெல்லாம் சிதைந்துவிடும்
நன்மையும் தீமையையும் தவிர

**பாத்திமா சய்தா**
**தரம் 07**
**ரஹ்மானிய்யா மு.வி.**

## ஆசிரியர்கள்



நன்மையே நாளும் எடுத்துச் சொல்வார்
நலமாய் வாழ்ந்திட கருத்துரைப்பார்
தன்னலம் கருதாது பணிபுரிவார்
தரணியில் உயர்ந்துவிட வழிகாட்டுவார்

தொழிலுக்கு நெஞ்சில் அடித்தளமிடுவார்
தொல்லைகள் இருந்தும் மறந்தே விடுவார்
மாணாக்கர் நமது பிள்ளைகள் என்பார்
மாண்புடன் ஒழுக்கம் காக்கச் செய்வார்

சமூகம் உயர்ந்திட பலதும் செய்வார்
சந்தியில் நிதமும் ஏச்சும் கேட்பார்
கலங்கிய கண்களைத் துடைத்தும் கொள்வார்
கடைசிவரை கடமை பேணிச் செல்வார்

**பாத்திமா நஜ்லா, தரம் - 09**
**கிரி/ அல் அமீன் ம.க.**
**அலபடகம, பன்னல**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



**நேரம் 45 நிமிடம்**

**வினாப்பத்திரம் I**



ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

*பின்வரும் பந்தியை வாசித்து விடை தருக.*

நிறுத்துங்கள்... நிறுத்துங்கள்

அவசரமாகப் போ தம்பி

அம்மா வலிக்கின்றது... ஆ... ஆ...

கொஞ்சம் பொறுத்துக்கொள் இப்போது வந்துவிடும்.

அம்மா இறங்குங்கள். நானும் உதவுகிறேன்.

இந்தா தம்பி பணம் ஐநூறு ரூபாய் இருக்கின்றது.

இந்தாருங்கள் அம்மா மீதி முந்நூற்று அறுபது ரூபாய்

அவரை உள்ளே கொண்டு வாருங்கள்

படுக்கையில் கிடத்துங்கள் வைத்தியர் இப்போது வந்துவிடுவார்.

1. இப்பந்தியில் இடம்பெற்ற கதாபாத்திரங்கள்
   i. 4 பேர் ii. 3 பேர்
   iii. 5 பேர்

2. இவர்கள் பிரயாணம் செய்த வாகனம்.
   i. சைக்கிள் ii. புகையிரதம்
   iii. முச்சக்கர வண்டி

3. வண்டியில் ஏற்றிச் செல்லப்பட்டவர்.
   i. வழிப்போக்கன் ii. நோயாளி
   iii. வைத்தியர்

4. இவர்கள் சென்ற இடம்.
   i. மருந்தகம் ii. மருத்துவ பீடம்
   iii. மருத்துவமனை

5. படுக்கையில் கிடத்துங்கள் எனக் கூறியவர்.
   i. மருத்துவர் ii. தந்தை
   iii. தாதி

6. வாகனக் கூலியாக கொடுக்கப்பட்ட தொகை
   i. ஐநூறு ரூபாய்
   ii. முந்நூற்று அறுபது ரூபாய்
   iii. நூற்று நாற்பது ரூபாய்

7. அவசரமாக என்பதற்கான எதிர்க்கருத்து.
   i. சீக்கிரமாக ii. தாமதமாக
   iii. கதியாக

8. பந்தியில் தன்மை ஒருமை உயர் திணையாக இடம்பெற்ற ஒரு சொல்.
   i. தம்பி ii. நான்
   iii. அம்மா

9. வந்து விடுவார் என்பது
   i. இறந்தகாலம் ii. நிகழ்காலம்
   iii. எதிர்காலம்

10. வாருங்கள் என்பதன் வினையடி
    i. வாரும் ii. வா
    iii. வந்தான்

**பின்வரும் வாக்கியங்களுள் மிகச் சரியான வாக்கியத்திற்கு கோடிடுக.**

11. i. பூரண நிலவு அமாவாசைத் தினத்தில் வானில் காட்சி தரும்.
    ii. பௌர்ணமி நிலவன்று உலகம் கும்மிருட்டில் மூழ்கியது.
    iii. அமாவாசை இரவில் நிலவைக் காண முடியாது.

12. i. பாலை நிலத்தில் சோலைகளை செழிப்பாகக் காணலாம்.
    ii. செழிப்பான சோலைகளை பாலை நிலத்தில் காண்பது அரிது.
    iii. சோலைகளில் அதிகம் அதிகம் மணல் திட்டுக்களைக் காணலாம்.

**பின்வரும் வாக்கியங்களுக்கான நிறுத்தற் குறிகளை இடுக.**

13. ஆனைக்கும் அடி சறுக்கும் என்பது பழமொழி ஆகும்.

14. பூபாலன், சிவநேசன், பசுபதி, கார்த்திகேயன் போன்றோர் நல்ல மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பின்வரும் வசனங்கள் அறிவித்தலாக இருப்பின் 'கரம்' எனவும், அறிவுறுத்தலாக இருப்பின் 'மரம்' எனவும் எழுதுக.**

15. சுற்றாடலை சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள்.

.................................

16. கூட்டம் நாளை மூன்று மணிக்கு நடைபெறும்.

.................................

**பின்வரும் வசனங்களை ஒழுங்கமைத்து இலக்க மிடுக.**

17. i. விளைபொருட்களை சந்தைப்படுத்தினர். ☐

ii. பசளை இட்டு நீர் பாய்ச்சினர். ☐

iii. கூடிய விலைக்கு விற்றுப் பணம் சம்பாதித்தனர். ☐

iv. கமக்காரர் நிலத்தை பண்படுத்தினர். ☐

v. அறுவடைக் காலத்தில் அறுவடை செய்தனர். ☐

**பின்வரும் உருக்களுக்கு மிகச்சரியான பெயரை எழுதுக.**

18. 

...........................

19. 

...........................

20. 

...........................

**முதல் கூட்டத்திற்குப் பொருத்தமான கூட்டத்திற்கு கோடிடுக.**

21.

| | i. | ii. | iii. |
|---|---|---|---|
| மா | பலா | குதிரை | பெரிய |
| பா | பார் | கவிதை | பாதி |
| கா | கார் | சோலை | காடு |

22.

| | i. | ii. | iii. |
|---|---|---|---|
| கடல் | முதலை | திருக்கை | சுறா |
| குளம் | சுறா | திமிங்கிலம் | முதலை |
| ஆறு | திருக்கை | மீன் | மீன் |

23.

| | i. | ii. |
|---|---|---|
| அகப்பை | தொலைக் காட்சி | அம்மி |
| உரல் | உலக்கை | திருகைக்கல் |
| கரண்டி | அம்மி | ஆட்டுக்கல் |

iii. கட்டில், மெத்தை, கணினி

**சரியான விடைக்குக் கோடிடுக.**

24. ஏகலைவனின் (பாணம், பானம்) நாயைக் கொன்றது.

25. சிறுவர்கள் (வானம், வாணம்) விட்டு விளையாடினர்.

**ஆரம்பத்தில் உள்ள உருக்களுடன் தொடர்பு படுத்தும்போது கிடைக்கும் உருவைத் தெரிவு செய்க.**

26. 

i. ii. iii.

27. 

i. ii. iii.

**வெற்று அடைப்புக்குள் வர வேண்டிய உருவைத் தெரிவு செய்க.**

28. 

i. ii. iii.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிடத்திற்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

**29.**





i. ii. iii.

**30.** உருவில் காட்டப்பட்டுள்ள வடிவத்தைப் பெறுவதற்கு ஒரு கம்பியை வளைக்கும் சரியான முறை



i.
ii.
iii.



சொற்களுக்கு மிகப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்க.

**31.** போக்குவரத்து - எரிபொருள் அற்றது

  

i. ii. iii.

**32.** அழகு - விருப்பம்

  

i. ii. iii.

பொருத்தமற்ற சோடியைத் தெரிவு செய்க.

**33.** i.



ii.



iii.



iv.



**34.** i.



ii.



iii.



iv.



**35.** இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



**36.** இவ்வுருவில் உள்ள செங்கோணங்கள் எத்தனை?



**37.** நேற்று வெள்ளிக்கிழமை. நாளை மறுநாள் கழித்து மூன்றாம் நாள் என்ன கிழமை?

i. வெள்ளி ii. சனி
iii. ஞாயிறு

**38.** தாவரத்திற்குப் பூவிலிருந்து கிடைக்கும் பயன்.

i. அழகூட்டல்

ii. நறுமணத்தைப் பரப்பல்

iii. அதன் இனத்தைப் பரப்ப உதவுதல்

**39.** விலங்கின் மூலம் பரம்பல் அடையும் வித்துக்கள் மாத்திரம் இடம்பெறும் விடை.

i. வேங்கை, கொவ்வை, நாவல்

ii. நாயுருவி, குருவிச்சை, தோடை

iii. மரமுந்திரிகை, கொய்யா, வேம்பு

**40.** புறா முட்டையின் நிறம்.

i. இளம் பச்சை ii. வெள்ளை
iii. மஞ்சள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA

41. குரங்கு தனது உடலை சமனிலையில் வைத்தி ருக்க உதவுவது எது?

i. கைகள் ii. கால்கள்
iii. வால்

42. நுரையீரல் மூலம் சுவாசிக்கும் பிராணி.

i. நீர்நாய் ii. மண்புழு
iii. மனிதன்

ஒரு மோட்டார் சைக்கிள், ஒரு பேருந்து, முச்சக்கர வண்டி ஆகியன 120 கி.மீ தூரம் செல்வதற்கு ஒரே இடத்தில் இருந்து புறப்பட் டன. அவை புறப்பட்ட நேரங்களும் சென்ற கதிகளும் கீழே காணப்படுகின்றன.

| வாகனம் | புறப்பட்ட நேரம் | கதி மணித்தியாலத்திற்கு கி.மீ. |
|---|---|---|
| பேருந்து | காலை 5.00 | 30 |
| முச்சக்கர வண்டி | காலை 6.00 | 40 |
| மோட்டார் சைக்கிள் | காலை 7.00 | 60 |

43. அவை சேர வேண்டிய இடத்தை என்ன முறையில் வந்தடைந்தன?

i. முச்சக்கர வண்டி, பேருந்து, மோட்டார் சைக்கிள்

ii. மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி, பேருந்து

iii. மோட்டார் சைக்கிள், பேருந்து, முச்சக்கர வண்டி

44. Aயின் தந்தை Cயின் மகனெனில் Aஆனவர் Cயிற்கு என்ன உறவு முறை?

i. பேரன் ii. பாட்டன்
iii. மகன்

45. கமலனிடம் இரண்டு ரூபாய் நாணயங்கள் மற்றும் ஐந்து ரூபா நாணயங்களாக ரூபா 23 உள்ளது. அதில் இருக்கத்தக்க இரண்டு ரூபா நாணயங்களின் எண்ணிக்கை யாது?

i. 3 ii. 4
iii. 6

பழங்களின் விலைகள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை நன்கு அவதானித்து கீழ்வரும் வினாக் களுக்கு விடை எழுதுக.



| | | | |
|---|---|---|---|
| ரூபா 90.00 | ரூபா 70.00 | ரூபா 100.00 | ரூபா 110.00 |

46. பப்பாசிப் பழம் ஒன்றின் விலை யாது?

i. ரூபா 50.00 ii. ரூபா 60.00
iii. ரூபா 40.00

47. இவற்றில் விலை மிகக் குறைந்த பழவகை எது?

i. அப்பிள் ii. மா
iii. அன்னாசி

ஒரு குடும்பத்தின் உறவு முறைகளைக் காட்டு வதற்குப் பின்வரும் கோட்டுப் படம் வரையப் பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கேட்கப் படும் வினாக்களுக்கு விடை எழுதுக.




48. மேலே தரப்பட்டுள்ள கோட்டுப் படத்தில் சாந்திக்கு எத்தனை பிள்ளைகள்?

i. 7 ii. 4
iii. 2

49. ரவி என்பவர் முரளிக்கு என்ன உறவு முறை ஆகும்?

i. அப்பா ii. பெரிய தந்தை
iii. பாட்டன்

50. சாந்திக்கு கமல் என்ன உறவு முறை?

i. மருமகன் ii. மருமகள்
iii. மாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் தர புலமைப்பரிசில் முன்னோடி வினாப்பத்திரம்



நேரம் 1 மணி 15 நிமிடம்

வினாப்பத்திரம் II



ஆசிரியர்கள். எஸ்.ஐ.எல். முஸம்மில் எம்.எம். முபாரக்

கீழ் காணப்படும் கட்டங்களில் உள்ள எழுத்துக்களை வைத்து வினாக்களுக்கான விடைகளை எழுதுக.

| | | | | |
|---|---|---|---|---|
| பு | ய | தூ | த் | ய |
| மி | போ | ரை | லி | னு |
| தி | வ | த | ன | ம |
| ரி | து | கூ | க | ஆ |
| மூ | ழு | கூ | ம் | ல் |

1. கழனி எனவும் கொள்ளலாம் ..................
2. இதனால் விதியையும் வெல்லலாம் என்பர் ..................
3. யானையின் இளையது .................
4. இது ஔவையாரால் பாடப்பட்டது ............
5. இரண்டுமே கண்ணெனத் தகும் என்ற பழமொழியில் இரண்டில் ஒன்று ..............

பின்வரும் பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளி நிரப்புக.

| | | | |
|---|---|---|---|
| பொல்லாங்கு | குந்தகம் | ஐம்பொறி | உபாயத்தால் |
| கோபத்தால் | ஐம்புலன் | தவிர் | வஞ்சனை |

6. மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன .........................களாகும்.
7. ஒருவரையும் ................ சொல்ல வேண்டாம்.
8. தளபதியின் ....................... போர் வெற்றி கொள்ளப்பட்டது.
9. அச்சம் .....................
10. ..............கள் செய்வாரோடிணங்க வேண்டாம்.

சரியான விடைக்குக் கோடிடுக.

11. மம்மட்டி, மண்வெட்டி, மம்முட்டி
12. கோடரி, கோடாரி, கோடலி
13. கறும்புச்சாரு, கரும்புச்சாறு, கருப்பஞ்சாரு
14. வென்னீர், வெண்ந்நீர், வெந்நீர்
15. மற்குடம், மன்குடம், மட்குடம்

பின்வரும் சிங்கள வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

16. கிரவா கொல பாட்டாய்

:.........................................................................

17. பல்லா புறனவா

:.........................................................................

18. இலங்கைக்குரிய முலையூட்டி

i. சுண்டெலி ii. வெளவால்
iii. முயல் iv. கரடி

19. இலங்கைக்கே உரிய பறவை

i. கானாங்கோழி ii. காகம்
iii. நீர்க்காகம் iv. நாரை

20. பின்வருவனவற்றுள் முலையூட்டி விலங்கு

i. முதலை ii. ஓணான்
iii. பல்லி iv. கீரி

21. ஒரு நிரையில் குமார் தொடக்கத்தில் இருந்து 10ஆவதாக நிற்கிறான். அவன் கடைசியில் இருந்து 5ஆவதாக நிற்கிறான்.

இதற்கமைய நிரையில் எத்தனை நபர்கள் நிற்கின்றனர்.

i. 15 ii. 16
iii. 14 iv. 19

22. பிழையான கோவையைத் தெரிவு செய்க.

i. $7 \times 7 + 7 = 56$ ii. $6 \times 6 - 9 = 45$
iii. $9 \times 9 + 99 = 180$

23. சரியான கோவையைத் தெரிவு செய்க.

i. $777 + 77 + 7 + 7 = 868$

ii. $777 + 7 + 77 + 7 + 7 = 868$

iii. $77 + 777 + 7 + 7 + 7 = 868$

அட்டவணையில் உள்ள தகவல்களுக்கு ஏற்ப விடை எழுதுக.

| நாள் | ஏப்ரல் 30 | மே 31 | ஜூன் 30 | ஜூலை 31 | ஆகஸ்ட் 30 |
|---|---|---|---|---|---|
| எண்ணிக்கை | 30 | 61 | 91 | ........... | 153 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. ஜுலை 31ஆம் திகதிக்குப் பொருத்தமான எண் யாது?

i. 121 ii. 130

iii. 122

நான்கு நண்பர்கள் ஆளுக்கு ரூபா 250 வீதம் செலுத்திச் சேர்த்த பணத்தில் ரூபா 384யை செலவு செய்தனர். மீதிப் பணத்தை தம்மிடையே சமமாகப் பங்கிட்டனர்.

25. செலவு செய்த பின்னர் எஞ்சியிருந்த பணம் ரூபா ...............

26. மீதிப் பணத்தில் ஒருவருக்கு கிடைக்கும் பணம் ரூபா ................

புத்தளத்தில் இருந்து காலை 6.15 மணிக்குப் புறப்பட்ட பஸ் வண்டி கண்டியை பிற்பகல் 2.30 மணிக்கு சென்றடைந்தது.

27. பஸ் கண்டியைச் சென்றடைந்த நேரத்தை 24 மணித்தியால கடிகாரத்திற்கேற்ப எழுதுக.

28. பஸ் எவ்வளவு நேரம் பயணித்தது?
.............. மணித்தியாலம் ............... நிமிடம்.

29. 9 பேனைகள் வீதம் 5 பெட்டிகளும் 7 பேனைகள் வீதம் உள்ள 4 பெட்டிகளும் உள்ளன. அந்த 9 பெட்டிகளிலும் உள்ள பேனைகளின் எண்ணிக்கை யாது?

30. கட்டடம் ஒன்று கட்டுவதற்கு இரண்டு வருடங்கள் தேவைப்படும். 2010ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி கட்டட வேலை ஆரம்பிக்கப் பட்டால் எப்பொழுது கட்டட வேலை முடிவடையும்?

31. மாணிக்க கங்கைக்கு அருகிலுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நகரம் ஒன்று.

i. கொழும்பு ii. மொனராகலை

iii. கதிர்காமம்

32. இருளை நாடும் பிராணி எது?

i. தேனீ ii. கரப்பான் பூச்சி

iii. கும்புடுப் பூச்சி

33. இலங்கையில் அதிக மழை வீழ்ச்சியைக் கொண்ட இடம்.

i. நுவரெலியா ii. பதுளை

iii. வட்டவளை

34. நிலையான காந்தமொன்றில் வட முனையைக் காட்ட பயன்படுத்தும் நிறம்.

i. கறுப்பு ii. சிவப்பு

iii. நீலம்

35. கோழி, தாரா போன்றவற்றுக்கு ஏற்படும் நோய்

i. பிளேக் நோய் ii. பறவைக் காய்ச்சல்

iii. வைரஸ் காய்ச்சல்

36. காந்தத்தினால் கவராத பொருள் எது?

i. செப்புக் காசு ii. சவர அலகு

iii. இரும்பு ஆணி

37. 2012ம் ஆண்டு 100வது நாள் எத்தனையாம் திகதி?

i. ஏப்ரல் 9 ii. ஏப்ரல் 10

iii. ஏப்ரல் 12

38. நகர்ப்புறமொன்றில் தொற்று நோய் பரவும் போது உடனடியாக யாருக்கு அறிவிக்க வேண்டும்?

i. பொலிஸ் அதிகாரிக்கு

ii. வைத்தியசாலை அலுவலகருக்கு

iii. பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கு

39. களுத்துறைப் பிரதேசக் கடலில் விழுவது.

i. களு கங்கை ii. களனி கங்கை

iii. வளவ கங்கை

40. இலங்கையில் உள்ள அழகிய நீர் வீழ்ச்சி எது?

i. துன்கிந்த ii. லக்ஸபான

iii. பம்பரகந்த

41. கைத்தெறி நெசவு கூடுதலாகக் காணப்படும் மாகாணம்.

i. மேல் மாகாணம்

ii. கிழக்கு மாகாணம்

iii. வட மாகாணம்

42. தொலைக்காட்சியில் செய்திகள் வாசிக்கும் போது முதலில் வாசிப்பது.

i. வெளிநாட்டுச் செய்திகள்

ii. தலைப்புச் செய்திகள்

iii. உள்நாட்டுச் செய்திகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. வானவில் காலையில் தோன்றும் திசை எது?

i. கிழக்கு ii. வடக்கு

iii. மேற்கு

எண் கோலத்தில் அடுத்து வரும் எண் களை எழுதுக.

44. 3040, 3060, 3080 ..................

45. 5030, 5020, 5010 ..................

46. பின்வரும் பின்னங்களில் 2/5 இற்கான சமவலுப் பின்னத்தை தெரிவு செய்க.

i. $\frac{2}{6}$ ii. $\frac{10}{50}$

iii. $\frac{4}{10}$ iv. $\frac{3}{6}$

47. $\frac{1}{4}$ ஐ சமனாகப் பிரித்தால் வரும் விடை.

i. $\frac{2}{8}$ ii. $\frac{1}{8}$ iii. $\frac{1}{2}$

48. பின்வரும் தாவரங்களுள் குறைவான காலத்தில் விளைச்சல் தரும் தாவரம்.

i. நெல் ii. தக்காளி

iii. சோளம்

49. வாகனம் ஒன்று இடப்பக்கமோ அல்லது வலப்பக்கமோ திரும்பும் போது ஒளிரும் விளக்கின் நிறம்.

i. பச்சை ii. சிவப்பு

iii. மஞ்சள்

எதிர்க்கருத்து தருக.

50. சோம்பல் : ................................

51. அவமானம் : ................................

52. நாற்றம் : ................................

பின்வரும் மரபு தொடர்களுக்கான கருத் தைத் தருக.

53. அள்ளி இறைத்தல் : ................................

54. ஒற்றைக் காலில் நிற்றல் : ........................

பின்வரும் ஆங்கில வாக்கியத்திற்கான கருத்தை எழுதுக.

55. I Can fly : ................................

56. I Like my mother : ................................

58. "நான் எதிர் நோக்கிய 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை" என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் குறைந்தது நான்கு சொற்களையேனும் கொண்டிருத்தல் அவசியம்.

## புலமைப்பரிசில் பரீட்சை வினாப்பத்திரம் i இற்கான விடைகள்

1. i
2. iii
3. ii
4. iii
5. iii
6. iii
7. i
8. ii
9. iii
10. ii
11. iii
12. ii
13. ஆனைக்கும் அடிசறுக்கும் என்பது பழமொழி.
14. பூபாலன், சிவநேசன், பசுபதி, கார்த்திகேயன் போன்றோர் நல்ல மாணவர்கள்
15. அறிவுறுத்தல்
16. அறிவித்தல்
17. 42513
18. அரிவாள்
19. கையடக்கத் தொலைபேசி
20. குத்துவிளக்கு
21. ii
22. iii
23. ii
24. பாணம்
25. வானம்
26. ii
27. i
28. ii
29. ii
30. ii
31. iii
32. i
33. iv
34. iii
35. v
36. 24
37. i
38. iii
39. iii
40. i
41. iii
42. i
43. ii
44. ii
45. ii
46. ii
47. ii
48. iii
49. iii
50. i

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரணர் தினம்

- வருடாந்தம் ஆகஸ்ட் 1ம் திகதி உலக சாரணர் தினம் அனுஷ்டிக்கப்படுகின்றது.
- முதலாவது சாரணர் இயக்க மாநாடு லண்டனில் நடைபெற்றது. அதிலேயே இத்தினத்தைக் கொண்டாடுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.
- உலகளாவிய ரீதியாக சாரணியத்தின் இலட்சியங்களையும் நோக்கங்களையும் நினைவுகூரும் தினமாக இது அனுஷ்டிக்கப்படுகின்றது.



## ஸ்டீபன் ஸ்மித் பேடன் பவுல்

- சாரணர் இயக்கத்தின் தந்தையாகக் கருதப்படும் இவர், இவ் அமைப்பின் ஸ்தாபகத் தலைவராவார்.
- 1857 பெப்ரவரி 22இல் பிறந்த இவர் 1876 இல் பிரித்தானிய இராணுவத்தில் இணைந்தார்.
- இவர் "Scouting for Boys", "Aids to Scouting" போன்ற நூல்களை எழுதியுள்ளார்.




## சாரணர் இயக்கம்

- 1907 ஜுலை 28இல் இவ் அமைப்பு தோற்றம் பெற்று, 1910இல் உலகமெங்கும் வியாபித்தது.
- பெண்கள் சாரணிய இயக்கம் 1910 பவுலின் மனைவி ஓவோ பேடன் பவுலால் ஆரம்பிக்கப்பட்டது.
- தற்போது சாரணர் சங்கங்கள் 216 நாடுகளில் செயற்பட்டு வருவதுடன், உலகெங்கும் அண்ணளவாக 38 மில்லியன் சாரணர்கள் உள்ளனர்.

## சாரணர் இயக்க சாதனையாளர்கள்

- நீல் ஆம்ஸ்ரோங் உட்பட நிலவில் கால்பதித்த 12 பேரில் 11 பேர் சாரணர் இயக்கத்தில் வளர்ந்தவர்களாவர்.
- நாசா அமைப்பின் தலைவராக இருந்த ஜேம்ஸ் லோவல் சாரணியராவார்.
- ஜோன் எப் கென்னடி, பில் கிளின்டன், ஜோஜ் புஷ் போன்றோரும் இவ்வமைப்பின் ஊடாக வளர்ந்தவர்களாவர்.
- பில் கேட்ஸ் சாரணியராக பணியாற்றியுள்ளார்.

## இலங்கையில் சாரணர் அமைப்பு

- இலங்கையில் 1912இல் F.G. Stevens என்பவரால் இவ்வமைப்பு மாத்தளை கிறிஸ்துவ ஆலயத்தில் அறிமுகம் செய்யப்பட்டது.
- 2012இல் இதன் நூற்றாண்டு நிறைவாகும்.
- 1921 மற்றும் 1934 இல் பவுல் மற்றும் அவரின் பாரியார் இலங்கையில் நிகழ்ந்த சாரணர் நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

## சாரணர் ஜம்போரி

- 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை உலக சாரணர்கள் ஒன்றிணைந்து சாரணர் ஜம்போரியை கொண்டாடுகின்றனர்.
- 1920இல் லண்டனில் முதலாவது சாரணர் ஜம்போரி கொண்டாடப்பட்டதுடன், 22வது சாரணர் ஜம்போரி சுவீடன் நாட்டில் 2011இல் நடைபெற்றது.
- 23வது ஜப்பானிலும், 24வது சிங்கப்பூரிலும் சாரணர் ஜம்போரி கொண்டாடப்படவுள்ளது.



facebook இல் Like செய்யுங்கள்...
www.facebook.com/aharamJmf

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தரம் 5 மாணவர்களின் வெற்றியின் இரகசியம்

# நந்தவனம்

Rs:320.00

ஆசிரியர் ஏ.எஸ். ஜௌபர்

எதிர்பார்க்கை வினாக்கள் அடங்கிய
மாதிரி வினாத்தாள்கள் 24
(விடைகளுடன்)

## ஏனைய வெளியீடுகள்...




Rs: 220.00




Rs: 300.00




Rs: 300.00




Rs: 450.00




Rs: 150.00




Rs: 300.00




Rs: 125.00




Rs: 300.00




Rs: 180.00




Rs: 350.00




Rs: 250.00




Rs: 265.00

**இஸ்லாமிக் புக் ஹவுஸ்**

**77, Dematagoda Road, Colombo 09.**

**Tel: 0112684851, Fax: 0112688102 Web: www.ibh.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org